வானவில்

VAANAVIL

இதழ் 146 மாசி 2023

ISSUE 146 FEBRUARY 2023

# முழுமையான நிர்வாக - பொருளாதார சீரமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்!




இலங்கையில் உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் முடிவடைந்து ஒரு வருடத்துக்கும் மேலாகிவிட்டது. காலம் கடந்தாவது அவற்றுக்கான தேர்தல் நடைபெறுமா என்பதும் நிச்சயம் இல்லாமல் இருக்கின்றது.

இவ்வாண்டு மார்ச் 09 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று கூறி அதற்கான வேட்பு மனுக்களையும் தேர்தல் திணைக்களம் கோரியிருந்த போதிலும், அத்திகதியிலும் தேர்தல் நடைபெறாது என இப்பொழுது தெரிய வந்துள்ளது. தேர்தலுக்குத் தேவையான பல கோடி ரூபா பணத்தை வழங்குவதற்கு திறைசேரியால் முடியாத நிலையில் தேர்தலுக்கான திகதி காலவரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்தப் பிரச்சினை இப்பொழுது அரசியல்மயப் படுத்தப்பட்டும் உள்ளது. அரசாங்கத்தை நடத்தும் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசியக் கட்சியும் இத் தேர்தலில் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்றபடியால்தான், அரசாங்கம் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிக்கின்றது என எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வருகின்றன. இதில் எவ்வளவு தூரம் உண்மை இருக்கின்றது எனத் தெரியாவிடினும், எதற்கெடுத்தாலும் மற்றவரைக் குறைகூறும் வசைபாடும் அரசியல் கலாச்சாரம் நாட்டில் ஆழமாக வேரூன்றி இருப்பதன் ஒரு விளைவு என்றும் இதனைக் கூறலாம்.

இதற்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். இவ்வாண்டு பெப்ருவரி 04 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் சுதந்திர தினம் நாட்டின் 75 ஆவது சுதந்திர தினமாகும். ஒரு நாட்டைப் பொறுத்த வரையில் அதன் சுதந்திர தினம் மிகவும் முக்கியமானது. அதுவும் 75 ஆவது சுதந்திர தினம் எனும் போது அது விசேட முக்கியத்துவம் வாய்ந்தது. சுதந்திர தினம் நாட்டு மக்கள் அனைவருக்கும் முக்கியமானது என்றபடியால்தான், கடந்த 74 வருடங்களாக மாறி மாறி ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் எல்லாமே தவறாமல் வருடா வருடம் சுதந்திர தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடி வந்துள்ளன.

ஆனால், தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி காரணமாக இவ்வாண்டு சுதந்திர தினத்தை, அதாவது 75 ஆவது சுதந்திர தினத்தைக் கொண்டாடத் தேவையில்லை என எதிர்க்கட்சிகள் விதண்டாவாதம் புரிந்தன. அவர்களது வாதத்தைப் புறம் தள்ளி அரசாங்கம் சிக்கனமான முறையில் சுதந்திர தினத்தைக் கொண்டாடிய போதும், எதிர்க் கட்சிகள் அவற்றில் பங்குபற்றாது அதைப் புறக்கணித்தன. அப்படியிருக்கிறது அவர்களின் தேசபக்தி.

பொருளாதார நெருக்கடி காரணமாக சுதந்திர தினத்தைக் கொண்டாட வேண்டாம் என்றவர்கள், நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறவில்லை அல்லது கூறத் தயாராக இல்லை. உண்மை என்னவென்றால், இன்று இலங்கை அரசியலில் கொடிகட்டிப் பறக்கும் எந்தவொரு அரசியல் கட்சியிடமும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒரு வழிவகையும் இல்லை. அரசாங்கமும் சரி, எதிர்க்கட்சிகளும் சரி, சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி போன்ற சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்களிடமும், அந்நிய நாடுகள் சிலவற்றிடமும் கடன் வாங்குவதன் மூலம் இலங்கையின் பொருளாதார

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# ரஷ்யா-உக்ரைன் மோதல் ஒரு வருடப் பூர்த்தி

“அன்பான ரஷ்ய மக்களே,

ஒரு கடினமான நேரத்தில் இன்றைய இந்த உரையை நான் நிகழ்த்துகிறேன் – இதனை நாங்கள் அனைவரும் நன்கு அறிவோம் – இன்றைய காலகட்டமானது, முழு உலகிலும் தீவிரமான, மீளமுடியாத மாற்றத்திற்கும், எமது நாட்டின் மற்றும் எமது மக்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கியமான வரலாற்று நிகழ்வுகளிற்கும், நாங்கள் ஒவ்வொருவரும் மகத்தான பொறுப்பை ஏற்பதற்குமான காலகட்டமாகும்.

ஒரு வருடத்திற்கு முன்னர், எமது வரலாற்று நிலங்களில் வாழும் மக்களைப் பாதுகாப்பதற்காகவும், எமது ரஷ்ய நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் மற்றும் 2014 ஆம் ஆண்டு ஆட்சிக் கவிழ்ப்புக்குப் பின்னர் நவ – நாசிகளின் பிடிக்குள்ளிருக்கும் உக்ரைன் ஆட்சியாளர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தலை அகற்றுவதற்காகவும், விசேட இராணுவ நடவடிக்கையைத் தொடங்க முடிவு செய்யப்பட்டது. எங்களிடம் தற்போது இருக்கும் பணிகளை படிப்படியாகவும் கவனமாகவும், சீராகவும் செய்வோம்”

ரஷ்யா — உக்ரைன் மோதல் தொடங்கி ஓராண்டு நிறைவு பெறுவதை முன்னிட்டு பெப்ரவரி 21[ஆ] திகதி ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கூட்டாட்சி பாராளுமன்றத்தில் பேசும்போது மேற்கண்டவாறு ஆரம்பித்து, ஏறத்தாள 2 மணித்தியாலங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனது உரையை நிகழ்த்தினார்.

இரண்டாம் உலக யுத்தம் முடிவடைந்த பின்னர் சோவியத் ரஷ்யாவிற்கும் அமெரிக்காவிற்குமிடையில் ஆரம்பித்த பனிப்போர் ஏறத்தாள 45 ஆண்டுகள் நீடித்தது. வெற்றி தோல்வி எதுவுமின்றி பனிப்போர் முடிவுக்கு வந்தபோதும், அமெரிக்கா தன்னை ஏகபோக வெற்றியாளனாகக் கருதி ஒற்றைத்துருவ உலக ஒழுங்கிற்குள் (Unilateral World Order) உலகைக் கடந்த 30 ஆண்டுகாலமாக கட்டுப்படுத்தி வருகின்றது. பனிப்போரின் முடிவுக்கு பின்னர் நேட்டோ (NATO) இராணுவக் கூட்டமைப்புக்கான தேவை எதுவுமில்லாத போதும், 1999 ஆண்டிலிருந்து கிழக்கு ஐரோப்பிய நாடுகளை புதிய உறுப்பினர்களாக இணைக்கத் தொடங்கியது. ரஷ்ய எல்லைகளை நோக்கிய இந்த விஸ்தரிக்கப்பினை தனக்கெதிரான நேரடி அச்சுறுத்தலாகவே ரஷ்யா எண்ணியது.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளே தற்போதைய ரஷ்ய – உக்ரைன் மோதலுக்கான சூத்திரதாரிகள். இவர்களே நேட்டோவில் உக்ரைன் இணைவதை ஊக்கப்படுத்தி, போரினைத் தீவிரப்படுத்துகிறார்கள். உக்ரைனில் போர் தொடங்குவதற்கு முன்னர், உக்ரைன் நேட்டோவில் சேர்க்கப்படுவதை நேட்டோவின் கணிசமான உறுப்பினர்கள் எதிர்த்து வந்தனர். ஆனால் அமெரிக்காவின் அழுத்தத்தால், தமது எதிர்ப்பினை பெரும்பாலான நாடுகள் இப்போது கைவிட்டுவிட்டன.

உக்ரைனுக்கான இராணுவத் தளவாடங்களுக்காக இதுவரையில் நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணைந்து 150 பில்லியன் டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளன. இத்தொகையில் 115 பில்லியன் டொலர்களை வழங்கி அமெரிக்காவே முன்னணியில் நிற்கின்றது. கடந்த ஒரு வருடப்போரில் இலட்சக்கணக்கான உக்ரேனிய வீரர்கள் காயமடைந்தும் இறந்துமுள்ளனர். அதே நேரத்தில், வழங்கப்படும் உதவிகளில் 70 வீத்தினை உக்ரைன் அரசாங்கம் திருடி ஊழல் செய்கின்றது என்பதைத் தெரிந்து கொண்டும் உதவிகள் கண்மூடித்தனமாகத் தொடர்கின்றன.

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கு அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளே காரணம் என்றும், ரஷ்யாவிற்கு உக்ரைன் முழுவதையும் கைப்பற்றும் நோக்கமோ அல்லது ரஷ்ய பேரரசை மீண்டும் நிறுவுதற்கான எந்த ஆதாரமோ கிடையாதென சிக்காக்கோ பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறைப் பேராசிரியர் ஜோன் மெர்ஷெய்மர் (John Mearsheimer) திரும்பத்திரும்ப கூறி வருகின்றார்.

கடந்த செப்டம்பரில் ரஷ்யாவிலிருந்து ஜேர்மனிக்கு பல்ரிக் கடல் (Baltic sea) வழியாக இயற்கை எரிவாயுவை கொண்டு செல்லும் குழாய்கள் (Nord Stream 2) தகர்க்கப்பட்டபோது, ரஷ்யாவே அதன் சொந்த குழாய்களில் கண்ணி வெடிகளைப் பொருத்தியதாக அமெரிக்க அதிகாரிகள் உடனடியாக அறிவித்து, கதையை திசை திருப்பப் பார்த்தனர். ஆனால் புகழ்பெற்ற அமெரிக்க புலனாய்வு பத்திரிகையாளர் சீமோர் ஹெர்ஷ் (Seymour Hersh) எழுதியுள்ள கட்டுரையில், நோர்வேயின் உதவியுடன் அமெரிக்க கடற்படைதான் நாசவேலையை நடத்தியதாக தெரிவித்துள்ளார்.

இறுதிச் சரிவை நோக்கி நகரும் வல்லரசுகள், ஓர் இராணுவத் தோல்வியிலிருந்து மீள, மற்றொரு இராணுவ மோதலுக்குத் தாவுகின்றன. உக்ரைனில் ரஷ்ய இராணுவத் தலையீட்டுக்கு வழிகோலிய அமெரிக்காவின் செய்கை இந்த வகையானதே. அத்துடன் இந்த மோதல் உலகளாவிய மேலாதிக்கத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்கான அமெரிக்காவின் மற்றுமொரு முயற்சியே. இதில் ஆபத்து என்னவென்றால், நிலைமைகள் எவ்வளவு மோசமாக இருக்கிறதோ, அந்தளவுக்கு அமெரிக்கா மோதலைத் தீவிரப்படுத்தி, ரஷ்யாவுடனான வெளிப்படையான மோதலைத் தூண்டுகிறார்கள். நேட்டோ நாடுகளிலுள்ள இராணுவத் தளங்கள் மீது ரஷ்யா தாக்குதல்களை நடத்துவதையோ அல்லது உக்ரைன் மீது தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதையோ ஆதரிக்கிறார்கள். இதன்மூலம் நேட்டோ நேரடியாகக் களத்தில் இறங்கி ரஷ்யாவைத் தோற்கடிக்கலாமென எதிர்பார்க்கிறார்கள். ஆனால் உக்ரைன் எல்லைகளுக்கு அப்பால் தனது கவனத்தைச் செலுத்தாது ரஷ்யா நிதானத்தை கடைப்பிடித்து வருகின்றது.

அமெரிக்காவிற்கும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளுக்கும் முன்னே குறைந்தது இரு தெரிவுகள் மாத்திரமே உள்ளன. ஒன்றில், உக்ரைன் குறித்த தங்கள் தற்போதைய கொள்கையை அவர்கள் தொடரலாம், இது ரஷ்யாவுடனான பகைமையை மென்மேலும் அதிகரிப்பதோடு, உக்ரைனைச் சீரழித்து, எல்லோரும் தோல்வி அடைய வேண்டிய சூழல் ஏற்படலாம். அல்லது வளமான உலகை உருவாக்க விரும்பினால், உக்ரைன் தொடர்பாக அவர்கள் மாற்றுக் கொள்கையொன்றினை கடைப்பிடிக்கலாம். அதாவது ரஷ்யாவிற்கு அச்சுறுத்தல் எதுவுமில்லாது நடுநிலையாக இருக்க உக்ரைனை அனுமதிப்பதோடு, ரஷ்யாவுடனான உறவுகளையும் மேற்குலகம் சீர்செய்து கொள்ள வேண்டும். இந்த மாதிரியான அணுகுமுறையால் மாத்திரமே, ரஷ்ய – உக்ரைன் யுத்தம் மூன்றாம் உலகப்போராக உருவெடுப்பதைத் தடுத்து நிறுத்தி, அனைத்து தரப்பினரும் அமைதியாக வாழலாம் என்ற நிலை உருவாகும்.

**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

‘வானவில்’ இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து ‘வானவில்’ இதழ்களையும் வாசிக்கலாம்.


# சோசலிசம் எதற்காக?

**பொ**ருளாதார, சமூகப் பிரச்சினைகளில் வல்லுனராக இல்லாத ஒருவர் சோசலிஷம் என்ற பொருள் பற்றிக் கருத்துத் தெரிவிப்பது சரியானதா? பற்பல காரணங்களினால் சரியானது என்றே நான் நம்புகிறேன்.

விஞ்ஞான அறிவுக் கண்ணோட்டத்திலிருந்து முதலில் இந்தப் பிரச்சினையை நோக்குவோம். வானியலுக்கும் பொருளாதாரத்துக்கும் இடையில் சாராம்சமான நடைமுறை ரீதியான வேறுபாடுகள் எதுவும் இல்லை என்பது போலத் தோன்றலாம்: இரு துறைகளையும் சார்ந்த விஞ்ஞானிகள் ஒரு வரம்புக்குட்பட்ட தொகுப்பில் அடங்கிய நிகழ்வுகளுக்கு இடையேயான பரஸ்பரத் தொடர்பினைக் கூடுமானவரைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் பொருட்டு, அந்த நிகழ்வுகளின் தொகுதிக்குப் பொதுவாக ஏற்றுக் கொள்ளத் தக்க விதிகளைக் கண்டறிய முயல்கிறார்கள். ஆனால் எதார்த்தத்தில் அத்தகைய நடைமுறை ரீதியான வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன.

பொருளாதாரத் துறையை எடுத்துக் கொண்டால், பொருளாதார நிகழ்வுகள் பெரும்பாலும் அனேகக் காரணிகளால் பாதிக்கப்படுகின்றன. அக்காரணிகள் ஒவ்வொன்றையும் தனித்தனியே மதிப்பீடு செய்வது மிகவும் கடினம் ஆகும். இத்தகைய சூழ்நிலை, பொருளாதாரத் துறையில் செயல்படும் பொதுவான விதிகளைக் கண்டறியும் பணியைச் சிக்கலாக்கியுள்ளது. அதோடுகூட, மனித வரலாற்றில், நன்கு அறியப்பட்ட நாகரிகக் காலப்பகுதி என்று சொல்லப்படுகின்ற காலந்தொட்டு இன்றுவரை நாம் சேர்த்து வைத்துள்ள அனுபவத்தின்மீது பெருமளவு செல்வாக்குச் செலுத்திய, கட்டுப்படுத்திய காரணிகள் முற்றாகப் பொருளாதார இயல்பு கொண்டவையே அன்றி வேறல்ல. எடுத்துக்காட்டாக, வரலாற்றில் இடம்பெற்றுள்ள பெரும் பேரரசுகளில் பெரும்பாலானவை போர் வெற்றிகளாலேயே நிலைபெற்றுள்ளன.

வெற்றி பெற்ற மக்கள், வெற்றி கொள்ளப்பட்ட நாட்டின் சிறப்புரிமை பெற்ற வர்க்கமாக சட்ட ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் தம்மை நிலைநிறுத்திக் கொண்டனர். அந்நாட்டு நிலங்களின் மீதான ஏகபோக உரிமையை தமக்கென அபகரித்துக்



கொண்டனர். தங்களுடைய ஆட்களையே அந்நாட்டில் மதக் குருக்களாய் நியமித்தனர். அம்மதக் குருக்கள் கல்வியைத் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொண்டு, சமுதாயத்தில் நிலவிய வர்க்கப் பிரிவினைகளை நிரந்தர சமூக அமைப்புகளாக மாற்றிவிட்டனர். அந்நாட்டு மக்கள் தமது சமுதாய நடவடிக்கைகளில் பின்பற்றக்கூடிய சமூக மதிப்புகளின் கட்டமைப்பை உருவாக்கினர். மக்கள் பெரும்பாலும் தங்களை அறியாமலேயே அதன்படி வழிநடத்தப்பட்டனர்.

***அல்பேர்ட் ஐன்ஸ்ரைன்***

ஆனால், தோர்ஸ்ரெயின் வெப்லென் (Thorstein Veblen) அவர்கள், மனிதகுல வளர்ச்சியில் “கொள்ளையடிக்கிற காலகட்டம்” (predatory phase) என்று அழைக்கிற நேற்றைய வரலாற்று மரபை நாம் எங்கேயும் உண்மையிலேயே விட்டொழித்ததாகத் தெரியவில்லை. அந்தக் காலகட்டத்துக்குரிய அறியக்கூடிய பொருளாதார உண்மைகள் மற்றும் அவற்றிலிருந்து நாம் தருவிக்க முடிகிற விதிகளும்கூட வரலாற்றின் பிற காலகட்டங்களுக்குப் பொருந்தாதவை ஆகும். சோசலிஷத்தின் உண்மையான நோக்கம், துல்லியமாக, மனிதகுல வளர்ச்சியின் கொள்ளைசார்ந்த காலகட்டத்திலிருந்து விடுபடுவதும், அதனையும் தாண்டி முன்னேறுவதுமே ஆகும். பொருளாதார விஞ்ஞானம் இப்போதிருக்கும் நிலையில் வருங்கால சோசலிஷ சமுதாயம் பற்றி எதுவும் கூற இயலாத நிலைமையே உள்ளது.

இரண்டாவதாக, சோசலிஷமானது ஒரு சமூக–அறநெறி முடிவை நோக்கி (towards social-ethical end) நெறிப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விஞ்ஞானத்தால் முடிவுகளை உருவாக்க முடியாது. மேலும் முடிவுகளை மனிதர்களுக்குள் புகட்ட அதைவிடவும் முடியாது. விஞ்ஞானம், அதிகப் பட்சமாக, சில முடிவுகளை எட்டுவதற்கான சாதனங்களை வழங்க முடியும். ஆனால் இத்தகைய முடிவுகள் தம்மளவில், உன்னத அறநெறி இலட்சியங்களைக் கொண்டுள்ள தலைவர்களின் சிந்தனையில் உருவானவையே ஆகும். சாராம்சமான, உந்துசக்தி மிக்க இந்தக் கருத்துகள் எண்ணத்திலிருந்து வெளிப்பட்டவுடனே, சமுதாயத்தின் மெதுவான பரிணாம வளர்ச்சியைத் தீர்மானிக்கின்ற மக்கள் திரள் அக்கருத்துகளை ஏற்றுக் கொண்டு, முன்னெடுத்துச் செல்கின்றனர். அவர்களில் பாதிப்பேர் தங்களை அறியாமலேயே இதில் ஈடுபடுகின்றனர்.

இந்தக் காரணங்களினால், மானுடப் பிரச்சினைகள் என்று வரும்போது, விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞான வழிமுறைகளைப் பற்றி அதிகமாக எடைபோட்டுவிடாமல் கவனமாக இருக்க வேண்டும். சமுதாய அமைப்பினைப் பாதிக்கின்ற பிரச்சினைகளின் மீது வல்லுநர்கள் மட்டுமே கருத்துக் கூறும் உரிமை பெற்றவர்கள் என நாம் கருதிவிடக் கூடாது.


மனித சமுதாயம் ஒரு நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது, அதன் நிலைப்புத் தன்மை மிக மோசமாக ஆட்டம் கண்டுள்ளது என்று அண்மைக் காலமாக எண்ணற்ற குரல்கள் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இத்தகைய சூழலில் தனிமனிதர்கள் தாம் சார்ந்த குழுவின்பால் – அது சிறிதாயினும் அல்லது பெரிதாயினும் – வெறுப்பும்,

பகைமையும் காட்டுவது இயல்பாய் உள்ளது. என்னுடைய கருத்தை விளக்கும் பொருட்டு என்னுடைய சொந்த அனுபவம் ஒன்றை இங்குப் பதிவு செய்ய விரும்புகிறேன். நான் அண்மையில், அறிவாளியான சிறந்த அந்தஸ்தில் உள்ள ஒருவருடன், இன்னொரு போர் வருவதற்கான அபாயம் குறித்து விவாதித்துக் கொண்டிருந்தேன். என்னுடைய கருத்தில் இன்னொரு போர் என்பது மனிதகுலத்தின் இருப்புக்கே மிக மோசமான ஆபத்தினை விளைவிக்கும். தேசங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பு ஒன்றினால் மட்டுமே இந்த ஆபத்திலிருந்து மனிதகுலத்தைக் காப்பாற்ற முடியும் என்று அவரிடம் கூறினேன். அதற்கு அந்த மனிதர் மிகவும் அமைதியாக, நிதானமாக என்னிடம் சொன்னார்: “மனித இனம் அழிந்து போவதை இவ்வளவு ஆழமாக எதற்காக நீங்கள் எதிர்க்கிறீர்கள்?”

ஒரு நூற்றாண்டு அளவிலான மிகக் குறுகிய காலத்துக்கு முன்னால் இதைப்போன்ற ஒரு கூற்றை இவ்வளவு அக்கறையின்றி எவரும் கூறியிருக்க முடியாது என என்னால் நிச்சயமாகக் கூற முடியும். தனக்குள்ளேயே ஒரு சமநிலைத் தன்மையை அடைவதற்கு வீணே போராடி, ஏறத்தாழ வெற்றி பெறுவதில் நம்பிக்கையை இழந்துவிட்ட ஒரு மனிதனின் கூற்றாகும் இது. வலிமிகுந்த தனிமையில் தனித்து ஒதுக்கப்பட்ட ஒருவரின் மன வெளிப்பாடு என்றே கொள்ள வேண்டும். இதற்குக் காரணம் யாது? இதிலிருந்து மீள்வதற்கு வழியுண்டா?

இத்தகைய கேள்விகளை எழுப்புவது எளிது. ஆனால், அக்கேள்விகளுக்கு ஓரளவுக்கேனும் நம்பிக்கையுடன் விடையளிப்பது கடினம். நமது உணர்வுகளும் முயற்சிகளும் எப்போதுமே முரண்பட்டும் தெளிவற்றும் உள்ளன. அவற்றை எளிய, சாதாரணச் சூத்திரங்களில் விளக்கிவிட முடியாது. இந்த உண்மையை நான் நன்கு அறிந்துள்ள போதிலும், என்னால் முடிந்த அளவுக்கு மேற்கண்ட கேள்விகளுக்குப் பதில்கூற முயல்கிறேன்.

மனிதன் என்பவன் ஒரே நேரத்தில் தனிமனிதனாகவும் சமூக மனிதனாகவும் இருக்கிறான். தனிமனிதன் என்ற நிலையில், அவன் தன் சொந்த விருப்பங்களைத் திருப்திப்படுத்தும் பொருட்டும், தன் உள்ளார்ந்த




திறமைகளை வளர்த்துக் கொள்ளும் பொருட்டும், அவனுடைய வாழ்க்கையையும் அவனுக்கு மிகவும் நெருக்கமாக உள்ளவர்களின் வாழ்க்கையையும் பாதுகாத்துக் கொள்ள முயல்கிறான்.

சமூக மனிதன் என்ற நிலையில், அவனுடன் வாழும் மனிதர்களின் அங்கீகாரத்தையும் அன்பையும் பெறவும், அவர்களுடைய மகிழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுடைய துயரத்தில் பங்கு கொள்ளவும், அவர்களுடைய வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்தவும் விரும்புகிறான். இத்தகைய, வேறுபட்ட, அடிக்கடி மோதிக் கொள்ளும் முயற்சிகள் இருப்பதே ஒரு மனிதனின் தனிச்சிறப்பான பண்புக்குக் காரணமாக அமைகிறது. இவற்றின் குறிப்பிட்ட சேர்க்கையே ஒரு தனிமனிதன் எந்த அளவுக்கு அகச் சமன்நிலையை அடைய முடியும், சமுதாயத்தின் நலனுக்குப் பங்காற்ற முடியும் என்பதைத் தீர்மானிக்கிறது. இந்த இருவேறு உந்து சக்திகளின் ஒப்பீட்டுப் பலம், பிரதானமாக மரபு வழியில் நிர்ணயிக்கப்படுவது சாத்தியமே. ஆனால், ஒரு மனிதனில் முடிவாக வெளிப்படும் ஆளுமை, அவனுடைய வளர்ச்சியின்போது அவன் வாழ நேர்ந்த சூழல், அவன் வளர்ந்த சமுதாயத்தின் கட்டமைப்பு, அந்த சமுதாயத்தின் மரபு, அந்தச் சமுதாயம் குறிப்பிட்டவகை நடத்தை பற்றிக் கொண்டுள்ள மதிப்பீடு ஆகியவற்றாலேயே பெருமளவு உருவாக்கப்படுகின்றது.


தனிமனிதனைப் பொறுத்தவரை “சமுதாயம்” என்கிற அருவமான கருத்துருவின் (abstract concept) பொருள், அவனது சமகால மனிதர்களோடும், முந்தைய தலைமுறைகளின் அனைத்து மக்களோடும் அவன் கொண்டுள்ள நேரடியான மற்றும் மறைமுகமான உறவுகளின் ஒட்டு மொத்தத்தையே குறிக்கிறது. ஒரு தனிமனிதர் தானாகவே சிந்திக்க, உணர, முயல, வேலை செய்ய இயலும் ஆனால், அவருடைய உடல் ரீதியான, அறிவு ரீதியான, உணர்வு ரீதியான வாழ்க்கையில் அவர் சமுதாயத்தின் மீது வெகுவாகச் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. சமுதாயம் என்னும் கட்டமைப்புக்கு வெளியே அவர் தன்னைப் பற்றிச் சிந்திக்கவோ, தன்னைப் புரிந்து கொள்ளவோ இயலாது. சமுதாயமே மனிதனுக்கு உணவு, உடை, உறையுள், வேலைக்கான கருவிகள், மொழி, சிந்தனையின் வடிவங்கள், சிந்தனையின் பெரும்பாலான உள்ளடக்கம் ஆகியவற்றை வழங்குகிறது. “சமுதாயம்” என்னும் சிறிய சொல்லின் பின்னால் மறைந்துள்ள, இக்காலத்து மற்றும் கடந்த காலத்து மக்கள் பலகோடிப் பேரின் உழைப்பின் மூலமாகவும், செயல்பாடுகளின் மூலமாகவுமே மனிதனின் வாழ்க்கை சாத்தியமாகியுள்ளது.

எனவே, தனிமனிதன் சமுதாயத்தின் மீது சார்ந்துள்ள தன்மையானது இயற்கையின் உண்மை என்பது வெளிப்படையாகும். எறும்புகள், தேனீக்கள் விஷயத்தில் நடந்ததைப் போல இந்த உண்மையை அழித்துவிட முடியாது. என்றாலும், எறும்புகள், தேனீக்களுடைய மொத்த வாழ்க்கையின் நிகழ்வுப்போக்கும் மிக நுண்ணிய அசைவுகள் வரைக்கும், கறாரான, பரம்பரை ரீதியான உள்ளுணர்வுகளினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. அதே வேளையில், மனிதர்களின் சமூகப் பாங்கும், பரஸ்பர உறவுமுறைகளும் மிகவும் வேறுபட்டவையாகவும் மாறக்கூடிய இயல்புடையனவாகவும் இருக்கின்றன. நினைவிருத்தல், புதிய சேர்க்கைகளை உருவாக்கும் திறன், பேச்சுவழித் தகவல் தொடர்பென்னும் கொடை ஆகியவை மனிதர்களிடையே வளர்ச்சியைச் சாத்தியமாக்கியுள்ளன. இவை உடலியல் ரீதியான தேவைகளால் ஆட்டுவிக்கப் படுவதில்லை. இத்தகைய வளர்ச்சியின் அடையாளங்கள் மரபுகளிலும், சமூக நிறுவனங்களிலும், அமைப்புகளிலும், இலக்கியத்திலும், விஞ்ஞான,

பொறியியல் செயல்பாடுகளிலும், கலைப் படைப்புகளிலும் வெளிப்படுகின்றன. இது, ஒருவகையில், மனிதன் தன் சொந்த நடத்தை மூலமாக அவனுடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்த முடிவதும், இந்த நிகழ்வுப் போக்கில் உணர்வு பூர்வமான சிந்தனையும், போதாமையும் ஒரு பங்கு வகிக்க முடிவதும் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விளக்குகிறது.

மனிதன் பிறப்பின்போது, மனித இனத்துக்கே உரிய இயற்கையான வேட்கைகளுடன் பரம்பரை வழியான உடல் கட்டமைவைப் பெறுகிறான். இவற்றை நிலையானதென்றும் மாற்ற முடியாதது என்றும் நாம் கருத வேண்டும். அதோடுகூட, அவனுடைய வாழ்நாளில் தகவல் தொடர்பு மற்றும் பிற வகையான பல்வேறு தாக்கங்கள் மூலமாகச் சமுதாயத்துடன் தகவமைத்துக் கொள்வதிலிருந்து ஒரு கலாச்சாரக் கட்டமைவைப் பெறுகிறான். காலத்தின் ஓட்டத்தில் மாற்றத்துக்கு உள்ளாகக் கூடிய இந்த கலாச்சாரக் கட்டமைவுதான் தனிமனிதனுக்கும் சமுதாயத்துக்கும் இடையிலான உறவுமுறையை மிகப் பெருமளவுக்குத் தீர்மானிக்கின்றது. நடப்பிலுள்ள கலாச்சாரப் பாங்குகளைப் பொறுத்தும், சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் சமூக அமைப்பின் வகைகளைப் பொறுத்தும் மனிதர்களின் சமூக நடத்தை மிகப்பெரும் அளவுக்கு வேறுபட முடியும் என்பதை புராதனக் கலாச்சாரங்கள் என்று சொல்லப்படுவனவற்றை ஒப்பீட்டாய்வு செய்ததன் மூலம் நவீன மானிடவியல் நமக்குக் கற்பித்துள்ளது. மனித குலத்தை மேம்படுத்த முயன்று வருவோர் தமது நம்பிக்கைகளை இதன்மீது ஊன்றலாம்: மனிதர்கள் அவர்களுடைய உடல்கூறு அமைப்பின் காரணமாக ஒருவரை ஒருவர் அழித்தொழிக்கவோ, கொடூரமான, தாங்களே விதித்துக் கொண்ட விதியின் தயவில் வாழ்வதற்கோ சபிக்கப்படவில்லை.

மனித வாழ்க்கையைச் சாத்தியமான வரையில் திருப்திகரமானதாக ஆக்கிக் கொள்ளும் பொருட்டு, சமுதாயத்தின் கட்டமைப்பும், மனிதனின் கலாச்சார அணுகுமுறையும் எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்று நம்மை நாமே கேட்டுக் கொள்வோமானால், சில நிலைமைகள் நம்மால் மாற்றியமைக்க முடியாதவாறு உள்ளன என்னும் உண்மையை எப்போதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கும்.





ஏற்கெனவே குறிப்பிட்டவாறு, எந்த வகையில் பார்த்தாலும், மனிதனின் உடலியல் ரீதியான இயல்பு, மாற்றத்துக்கு உட்படாதது. அதற்கும் மேலாக, கடந்த சில நூற்றாண்டுகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப, சமூகநிலை வளர்ச்சிகள் இங்கே நிலைத்து நிற்கக் கூடிய நிலைமைகளை உருவாக்கி வைத்துள்ளன. தமது தொடர்ச்சியான வாழ்க்கைக்கு இன்றியமையாத சாதனங்கள் தேவைப்படுகின்ற, சற்றே நெருக்கமான மக்கள் தொகை கொண்ட சமுதாய அமைப்பில் தீவிரமான உழைப்புப் பிரிவினையும் மிக அதிகமாக மையப்படுத்தப்பட்ட உற்பத்தி முறையும் கட்டாயத் தேவையாகும். தனிமனிதர்களோ, ஓரளவு சிறிய குழுக்களோ முழுமையான தன்னிறைவுடன் வாழ முடிகின்ற காலம் – திரும்பிப் பார்த்தால் சொர்க்கமாய் இருந்த அந்தக் காலம் – போயே விட்டது. மனிதகுலம் இப்போதும்கூட உற்பத்தி மற்றும் நுகர்வு சார்ந்த பூமிவாழ் சமூகத்தையே கொண்டுள்ளது என்று கூறினால் மிகையாகாது.

என்னைப் பொறுத்தவரை நமது காலத்து நெருக்கடியின் சாராம்சம் என்ன என்பதைச் சுருக்கமாகச் சுட்டிக்காட்ட வேண்டிய கட்டத்துக்கு நான் இப்போது வந்துவிட்டேன். அது தனிமனிதருக்கு சமுதாயத்தோடுள்ள உறவுநிலை பற்றியதாகும். தனிமனிதர் சமுதாயத்து மீதுள்ள தனது சார்புத் தன்மையை முன் எப்போதையும்விட இப்போது அதிகமாக உணர்கிறார். ஆனால், இந்தச் சார்புத் தன்மையை ஒரு சாதகமான அனுகூலமாகவோ, ஓர் இயற்கையான பந்தமாகவோ, ஒரு பாதுகாப்பான சக்தியாகவோ அனுபவத்தில் அவர் உணரவில்லை. மாறாக, அவருடைய இயல்பான உரிமைகளுக்கும் அவருடைய பொருளாதார வாழ்வுக்குமேகூட ஓர் ஆபத்தாகவே கருதுகிறார். மேலும், சமுதாயத்தில் அவர் வகிக்கும் இடம், அவரின் உள்ளார்ந்த 'தான்' என்னும் தன்முனைப்பு உந்துதலை எப்போதும் வலியுறுத்துகின்ற நிலையிலேயே உள்ளது. அதே வேளையில், அவருடைய சமுதாய ரீதியான உந்து சக்திகள் இயல்பாகப் பலவீனமாகவே உள்ளன, படிப்படியாக நசிந்து வருகின்றன.

அனைத்து மனிதர்களுமே, அவர்கள் சமுதாயத்தில் எத்தகைய அந்தஸ்தில் உள்ளவராயினும், இத்தகைய நசிவுப் போக்கினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தங்களை அறியாமலேயே தமது சொந்தத் தன்னகந்தையின் கைதிகளாக இருக்கும் இவர்கள் பாதுகாப்பற்று இருப்பதாகவும், தனித்து விடப்பட்டுள்ளதாகவும் உணர்கின்றனர். சூதுவாது இல்லாத, எளிய, பகட்டில்லாத முறையில் வாழ்க்கையை அனுபவிக்க முடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர். வாழ்க்கை குறுகியதாகவும் ஆபத்தானதாகவும் இருந்த போதிலும், மனிதன் சமுதாயத்துக்குத் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதன் மூலமாக மட்டுமே வாழ்க்கையின் அர்த்தத்தைக் காண முடியும்.

[இன்றைய மனித சமூகத்தின்] கேடுகளுக்கு உண்மையான மூல காரணம் இன்றைக்கு நிலவுகின்ற முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார அராஜகமே என்பது என்னுடைய கருத்தாகும். உற்பத்தியாளர்களைக் கொண்ட ஒரு பெரிய சமூகக் குழுவின் உறுப்பினர்கள், அவர்களுடைய கூட்டு உழைப்பின் பலன்களை அனுபவிக்க விடாமல் ஒருவர் மற்றவரைத் தடுப்பதற்கு தொடர்ந்து முயன்று வருகின்றனர் என்பதை நம் கண்முன்னால் காண்கிறோம். பலாத்காரத்தின் மூலமாக அல்ல, மொத்தத்தில் சட்டப்படி நிலைநாட்டப்பட்டுள்ள விதிகளுக்கு உட்பட்டே இதனைச் செய்து வருகின்றனர். இந்தவகையில், உற்பத்தி சாதனங்கள் அனைத்தும் அதாவது, நுகர்வுப் பண்டங்களையும் அதோடுகூட மூலதனப் பண்டங்களையும் உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஒட்டுமொத்த உற்பத்தி சக்தி அனைத்தும் சட்ட ரீதியாகவே தனிநபர்களின் தனிச்சொத்தாக இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும்.

இனிவரும் விவாதத்தில், எளிமை கருதி, உற்பத்தி சாதனங்களின் உரிமையில் பங்கில்லாத அனைவரையும் "தொழிலாளர்கள்" என்று அழைக்க இருக்கிறேன்,



வழக்காற்றில் இச்சொல்லை அந்தப் பொருளில் பயன்படுத்துவதில்லை என்றபோதிலும். உற்பத்தி சாதனங்களின் உரிமையாளர் தொழிலாளியின் உழைப்புச் சக்தியை விலைக்கு வாங்குகின்ற நிலையில் உள்ளார். உழைப்பு சாதனங்களைப் பயன்படுத்தி தொழிலாளி உற்பத்தி செய்யும் புதிய பண்டங்கள் முதலாளியின் உடைமையாக ஆகின்றன. இந்த நிகழ்வுப்போக்கு பற்றிய சாராம்சமான கருத்து என்னவெனில், தொழிலாளி உற்பத்தி செய்த பொருள், அவருடைய கூலி இவை இரண்டுக்கும் இடையே உள்ள தொடர்பே ஆகும். இரண்டும் உண்மை மதிப்பின் மூலமே அளவிடப்படுகின்றன. உழைப்புக்கான ஒப்பந்தம் சுதந்திரமாக இருக்கும் பட்சத்தில், தொழிலாளி கூலியாகப் பெறுவது அவர் உற்பத்தி செய்த பண்டங்களின் உண்மையான மதிப்பைக் கொண்டு நிர்ணயிக்கப்படுவதில்லை. தொழிலாளியின் குறைந்தபட்சத் தேவைகள், உற்பத்தி வேலைகளுக்காகப் போட்டியிடும் தொழிலாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிடுகையில் முதலாளிக்குத் தேவைப்படும் உழைப்பு சக்தி ஆகியவற்றைக் கொண்டே [தொழிலாளியின் கூலி] நிர்ணயிக்கப்படுகிறது. கொள்கை அளவில்கூட, தொழிலாளிக்கு வழங்கப்படும் கூலி அவர் உற்பத்தி செய்யும் பொருளின் மதிப்பு அடிப்படையில் நிர்ணயிக்கப்படுவதில்லை என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம்.

தனியார் மூலதனம் ஒரு சிலரின் கைகளிலேயே குவியத் தொடங்குகிறது. முதலாளிகளுக்கு இடையே நிலவும் போட்டி இதற்கு ஒரு காரணமாகும். தொழில்நுட்ப வளர்ச்சியும் வேலைப் பிரிவினையின் அதிகரிப்பும் சேர்ந்து, சிறிய அளவில் உற்பத்தி செய்யும் தொழிலகங்களை விழுங்கிப் பெரிய அளவிலான தொழிற்சாலைகள் அமைவதற்கு உதவுவதும் இன்னொரு காரணமாகும். இத்தகைய வளர்ச்சிப்போக்கின் விளைவாக, தனியார் மூலதனத்தைக் கையில் வைத்துள்ள ஒருசிலரின் ஆதிக்க ஆட்சி உருவாகிறது. அதன் அளவிறந்த ஆற்றலை ஜனநாயக ரீதியில் அமைந்த ஓர் அரசியல் சமுதாயத்தால்கூடத் தீர்மானகரமாய்த் தடுத்து நிறுத்த இயலாது. இது உண்மை ஆகும். காரணம், தனியார் முதலாளிகள் பெருமளவு நிதியுதவி அளிக்கின்ற அல்லது பிறவகையில் செல்வாக்குச் செலுத்துகின்ற அரசியல் கட்சிகளே சட்டமன்றங்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கின்றன. எந்த வகையில் பார்த்தாலும், வாக்காளர்களைச் சட்டமன்றங்களிலிருந்து பிரித்து விடுகின்றனர். இதன் விளைவாக, மக்களின் பிரதிநிதிகள் [என்று சொல்லப்படுகின்றவர்கள்] சமுதாயத்தில் ஒடுக்கப்பட்ட பிரிவினரின் நலன்களைப் போதுமான அளவுக்குக் காப்பாற்றுவதில்லை. மேலும், தற்போது நிலவும் சூழ்நிலையில், தனியார் முதலாளிகள், நேரடியாகவோ மறைமுகமாகவோ, பிரதான தகவல் சாதனங்களை (பத்திரிகை, வானொலி, கல்வி) தவிர்க்க முடியாதவாறு தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். எனவே, ஒரு தனிக் குடிமகன் புறநிலையான முடிவுகளுக்கு வருவதோ, தனது அரசியல் உரிமைகளை புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக் கொள்வதோ மிகமிகக் கடினம், பல நேரங்களில் நிச்சயமாக முடியாததும் ஆகும்.

மூலதனத்தின் மீதான தனிச் சொத்துரிமையின் அடிப்படையில் அமைந்த பொருளாதாரத்தில் நிலவுகின்ற சூழலை இரண்டு பிரதானக் கோட்பாடுகளின் மூலம் இவ்வாறாக விளக்கலாம்: முதலாவதாக, உற்பத்தி சாதனங்கள் (மூலதனம்) தனியாருக்குச் சொந்தமாக இருக்கின்றன. அதன் உரிமையாளர்கள் தாம் விரும்பியவாறு அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இரண்டாவதாக, உழைப்பு ஒப்பந்தம் சுதந்திரமானது. என்றாலும், இந்த அர்த்தத்தில், கலப்பற்ற முதலாளித்துவ சமுதாயம் என எதுவும் கிடையாது. குறிப்பாக, தொழிலாளர்கள் நீண்ட கசப்பான அரசியல் போராட்டங்களின் மூலமாக, சில வகையினத் தொழிலாளர்களுக்குச் சற்றே மேம்பட்ட வடிவில் "சுதந்திர உழைப்பு ஒப்பந்தம்" பெற்றுத் தருவதில் வெற்றி கண்டனர். ஆனால், ஒட்டுமொத்தமாகப் பார்க்கையில், இன்றைய பொருளாதாரம், "கலப்பற்ற" முதலாளித்துவத்திலிருந்து பெரிதாக வேறுபடவில்லை.

உற்பத்தியானது இலாபத்துக்காக செய்யப்படுகின்றது, பயன்பாட்டுக்காக அல்ல. வேலை செய்ய முடிகிற, வேலை செய்ய விரும்புகின்ற அனைவருக்கும் எப்போதும் வேலை கிடைப்பதற்கான உத்தரவாதம் அளிக்கின்ற சட்டம் எதுவுமில்லை. எந்த நேரத்திலும் வேலை பறிபோகலாம் என்ற பயத்திலேயே தொழிலாளி வாழ்கிறான். வேலையற்ற தொழிலாளர்களும் மிகக் குறைவான கூலி பெறும் தொழிலாளர்களும் இலாபகரமான சந்தைக்கு உதவ மாட்டார்கள். இதன் காரணமாக, நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தி கட்டுப்படுத்தப்படுகிறது. மிகுந்த இன்னலே இதன் விளைவாகும்.

தொழில்நுட்ப முன்னேற்றம், அனைவரின் வேலைச் சுமையைக் குறைப்பதற்குப் பதிலாக, பெரும்பாலும் மிகுதியான வேலையின்மைக்கே வழி வகுத்துள்ளது. இலாப நோக்கம், முதலாளிகளுக்கு இடையேயான போட்டியுடன் சேர்ந்து, மூலதனக் குவிப்பிலும், அதன் பயனாக்கத்திலும் ஒரு நிலையற்ற தன்மைக்குக் காரணமாக அமைகிறது. இதுவே, மிகுதியான அளவில், மிக மோசமான பொருளாதார நெருக்கடிகளுக்கு இட்டுச் செல்கிறது. வரம்பிலாப் போட்டி, மிகுதியான உழைப்பு விரயத்துக்கும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, தனிமனிதர்களின் சமூக உணர்வு ஆட்டம் காண்பதற்கும் காரணமாகிறது.

தனிமனிதர்களின் சிதைவையே முதலாளித்துவத்தின் மிக மிக மோசமான கேடாகக் கருதுகிறேன். நமது மொத்தக் கல்வி அமைப்பே இந்தக் கேட்டினால் கெட்டுக் கிடக்கிறது. ஒரு மிகைப்படுத்தப்பட்ட போட்டி மனப்பான்மை மாணவனுக்குள்ளே வளர்க்கப்படுகிறது. அவன் தன்னுடைய எதிர்கால முன்னேற்றத்துக்குப் பொருளாதரா வெற்றிகளைப் பூஜிப்பதற்கே பயிற்றுவிக்கப்படுகிறான். இத்தகைய மோசமான கேடுகளையெல்லாம் களைவதற்கு ஒரேயொரு வழி மட்டுமே உள்ளது என நான் நம்புகிறேன். ஒரு சோசலிஷப் பொருளாதார அமைப்பை நிறுவி, சமூக நோக்கங்களை

அடிப்படையாகக் கொண்ட ஒரு கல்வி முறையை நடைமுறைப்படுத்துவதே ஒரே வழி. அத்தகைய ஒரு பொருளாதார அமைப்பில் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் சமுதாயத்துக்கே சொந்தமானதாக இருக்கும். திட்டமிட்ட முறையில் அவை பயன்படுத்திக் கொள்ளப்படும். சமுதாயத்தின் தேவைகளுக்கு ஏற்ப உற்பத்தியை ஒழுங்குபடுத்தும் ஒரு திட்டமிட்ட பொருளாதார அமைப்பாக அது இருக்கும். செய்யப்பட வேண்டிய வேலைகள், வேலை செய்ய முடிகிற அனைவர்க்கு இடையேயும் பகிர்ந்தளிக்கப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும், பெண்ணுக்கும், குழந்தைக்கும் வாழ்க்கைக்கு உத்திரவாதம் அளிக்கும். ஒருவருக்கு அளிக்கப்படும் கல்வி, அவரின் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்ப்பதோடு, தற்கால சமுதாயத்தில் இருப்பதைப்போல அதிகாரத்தையும் அதன் வெற்றியையும் போற்றுகின்ற மனப்பான்மைக்குப் பதிலாக, சக மனிதர்கள் மீதான ஒரு அக்கறை உணர்வை அவருக்குள்ளே வளர்ப்பதற்கு முயலும்.

எனினும், திட்டமிட்ட பொருளாதாரம் என்பது சோசலிஷம் ஆகிவிடாது என்பதை நினைவில் கொள்வது முக்கியம். திட்டமிட்ட பொருளாதாரத்துடன், இயல்பாகவே தனிமனிதனின் முழுமையான சார்புநிலையும் சேர்ந்தே வரலாம். சோசலிஷத்தை அடைய, மிகமிகக் கடினமான சில சமூக – அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது அவசியமாகிறது: தீவிர விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய, அரசியல், பொருளாதார அதிகாரங்களை மையப்படுத்தலை நோக்குகையில், அதிகார வர்க்கம் எல்லாம் வல்லதாகவும், அகங்காரம் மிக்கதாகவும் ஆகிப்போவதைத் தடுப்பது எவ்வாறு சாத்தியம்? தனிமனிதனின் உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க முடியும்? அதன்மூலம், அதிகார வர்க்கத்தின் அதிகாரத்துக்கு ஒரு ஜனநாயக எதிரீட்டை உறுதி செய்வது எவ்வாறு?

[புதிய கட்டத்துக்கு] மாறிச் செல்லும் நமது காலத்தில், சோசலிஷத்தின் நோக்கங்கள் பற்றியும் அதன் பிரச்சினைகள் பற்றியும் தெளிவு பெறுவது மிகப்பெரும் முக்கியத்துவம் பெறுகிறது. இன்றைய சூழ்நிலையில், இத்தகைய பிரச்சினைகள் பற்றிய சுதந்திரமான, குறுக்கீடில்லாத விவாதம் சக்திமிக்க தடைக்கு ஆளாக்கப்பட்டுள்ளதால், இந்தப் பத்திரிகையைத் தொடங்குவது ஒரு முக்கியமான பொதுச் சேவையெனக் கருதுகிறேன்.

**தமிழாக்கம்: மு.சிவலிங்கம்**

(*1949*, மே மாதத்தில் 'Monthly Review' எனும் இதழ் தொடங்கப்பட்டு, வெளிவந்த முதல் இதழில் இக்கட்டுரை இடம்பெற்றிருந்தது. பின்னர் *1998* மற்றும் *2009* ஆம் ஆண்டு மே மாதத்து இதழிலும், இதே கட்டுரை மீண்டும் இருமுறை வெளியிடப்பட்டது)

# அல் கைடாவை உருவாக்கியதே அமெரிக்காதான்! - ஈரான் குற்றச்சாட்டு

**அ**ல் கைடா (al-Qaeda) மற்றும் டேஷ் (Daesh) உள்ளிட்ட பயங்கரவாத அமைப்புகளை உருவாக்கியதே அமெரிக்காதான் என்று ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. அல் கொய்தா அமைப்பின் தலைவர் ஒருவர் ஈரானில் இருப்பதாக அமெரிக்க நிர்வாகம் கூறியிருக்கிறது. அமெரிக்க அரசுச் செய்தித் தொடர்பாளர்களில் ஒருவரான நெட் பிரைஸ் (Ned Price) தனது டுவிட்டர் கணக்கில் இது குறித்துப் பதிவு செய்திருந்தார். செய்ப் அல் அடெல் (Seif al-Adel) என்ற அல் கைடா அமைப்பின் தலைவர் ஈரானில் இருப்பதாகவும், அவர்தான் அந்த அமைப்பின் புதிய தலைவராகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என்றும் அந்தப் பதிவில் பிரைஸ் குறிப்பிட்டிருந்தார். இதற்கான ஆதாரங்கள் எதையும் பிரைஸ் பதிவு செய்யவில்லை. அவரது இந்தப் பதிவுக்கு ஈரான் கடுமையாகக் கண்டனம் தெரிவித்துள்ளது. இது குறித்துக் கருத்து தெரிவித்த ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் ஹூசைன் அமிர் அப்துல்லாஹியான் (Hossein Amir Abdollahian), அல் கைடாவின் புதிய தலைவர் ஈரானில் இருக்கிறார் என்பதைக் கடுமையாக மறுத்திருக்கிறார். இதுபோன்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்த வேண்டாம்



என்றும் டுவிட்டர் மூலமாகப் பதிலளித்திருக்கிறார்.

அமெரிக்க செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ், அத்தோடு நிறுத்திக் கொள்ளவில்லை. செய்தியாளர்களைச் சந்தித்துத் தனது குற்றச்சாட்டை மீண்டும் கூறியிருக்கிறார். அல் அல் கைடாவுக்குப் பாதுகாப்பான இடமாக ஈரான் மாறியிருக்கிறது. பயங்கரவாதத்திற்கு ஈரான் ஆதரவு அளிக்கிறது என்று குற்றம் சாட்டினார். அப்போது செய்தியாளர் ஒருவர், "ஒருவேளை அல் கைடாவின் புதிய தலைவர் ஈரானில் இருப்பது உறுதியானால் நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பீர்கள்?" என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த பிரைஸ், "உலகின் எந்த மூலையிலும் இது போன்ற சவால்கள் எழுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம். எங்கள் ஐரோப்பிய கூட்டாளிகளுடன் இணைந்து சமாளிப்போம்" என்றார்.

கடந்த ஆண்டு ஜூலை மாதத்தில் அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ நடத்திய தாக்குதலில் அல் கைடாவின் தலைவர் அய்மான் அல் ஜவாஹிரி (Ayman al-Zawahiri) கொல்லப்பட்டதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் (Joe Biden) அறிவித்தார். ஆளில்லா விமானம் மூலமாக ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள குடியிருப்புப் பகுதியில் அவர் தங்கியிருந்த வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் அவர் கொல்லப்பட்டதாகத் தகவல்கள் வெளியாகின. அவருக்குப் பதிலாக புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டவர் யார் என்பதை இதுவரையில் அல் கைடா அறிவிக்கவில்லை.

**"பயங்கரவாதத்தின் முகவரி"**

அமெரிக்காவின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலடி தந்த ஹூசைன் அமிர் அப்துல்லா ஹியான், "இன்று உலகம்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# 2023 ஜனவரி 30: காந்தியின் 75வது நினைவு தினம்


'மகாத்மா காந்தி' என்று இந்திய மக்களால் அன்புடன் அழைக்கப்படும் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி, இந்த மண்ணுலகில் வாழ்ந்தது சரியாக 78 வருடம் மூன்று மாதம் 28 நாட்களே. இவற்றில் தென்னாப்பிரிக்கவிலிருந்து, இந்தியா திரும்பிய அவர், இந்தியாவில் வாழ்ந்து, இந்திய மக்களை வழிநடத்தியது 33 வருடங்கள் 21 நாட்களே. இந்த 33 ஆண்டு காலத்தில் அவர் ஆற்றிய அரும்பணிகள் வேறு எவரும் நினைத்துக்கூட பார்க்க முடியாதவை.

தென்னாப்பிரிக்காவிலிருந்து திரும்பி வரும்போது காந்தி அமைதியின் உருவாகவே வந்தார். ஆனால், எவராலும் எண்ணிப் பார்க்க முடியாத, மிக உயர்ந்த இலட்சியங்களை உள்ளத்தில் ஏந்தி வந்தார். இந்தியாவிலிருந்து ஆங்கிலேய அரசை அகற்ற வேண்டும் என்பது மட்டுமே அவரது இலட்சியம் அல்ல. அன்று இந்தியாவில் நிலவிவந்த அனைத்து அவலங்களையும் துடைத்தெறிந்து ஒரு புதிய இந்தியாவை உருவாக்க வேண்டும் என்று எண்ணினார்.

காந்தி தன்னை நம்பினார் அதேபோல் சகமனிதர்கள் அனைவர் மீதும் நம்பிக்கை வைத்தார். அவரது சாதனைகளை எண்ணிப்பார்த்தால், எவரும் மலைத்து நிற்பார்கள். அவ்வகையில் அவர் ஓர் புரட்சியாளர்.

அவர் முதலில் நாட்டு மக்கள் உள்ளத்திலிருந்த அச்சத்தைப் போக்கினார். அதை ஆங்கிலத்தில் 'ஃபியர் நொட்' (fear not) என்றார். அடுத்து 'ஹேட் நொட்' (hate not) என்று கூறி வெறுப்பை விலக்கினார். ஆண்டான் அடிமை என்ற பேதத்தை நீக்கி, அனைவரும் சமம் என்ற உணர்வை ஊட்டினார். செல்வந்தர்களை தியாகிகளாக்கினார் வீட்டுக்குள் முடங்கிக்கிடந்த பெண்களை, வெளியே வரச் செய்து நாட்டுக்கு உழைக்கும் வீராங்கனைகளாக மாற்றினார். வறுமை ஒழிக்கப்படாதவரை இந்தியா சுதந்திரம் பெறுவதில் பொருளே இல்லை என்றார்.

அனைத்துத் தரப்பினரும் அண்ணலின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார்கள். அவரால் மனமாற்றம் அடையாதவர்கள் எவருமே இல்லை என்ற நிலை



உருவானது.

அண்ணலின் அரிய ஆன்ம சக்தியை முதலில் உணர்ந்தவர், அண்ணல் தனது குருவாக ஏற்றுக்கொண்ட கோபால கிருஷ்ண கோகலேதான். தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்த காந்திஜியை நோக்கி, 'மண்ணைக் கொண்டு மனிதர்களை ஆக்கவல்ல தெய்வீக சக்தி உன்பால் அமைந்திருக்கிறது. இரும்பையும் பொன்னாக்கும் ரசவாத சக்தி உன்னிடம் உள்ளது' எனக் கூறினார்.

*முனைவர் அ. பிச்சை*

அவரது வாக்கு பொய்க்கவில்லை. ஒவ்வொரு இந்தியரையும் தெய்வபக்தியும், தேசபக்தியும் உள்ளவராக மாற்றினார். ஒட்டுமொத்த இந்தியாவையும் ஒற்றுமைப்படுத்தினார். இது ஒரு புரட்சிதானே!

அண்ணல் தனிமனிதனை மட்டும் மாற்றவில்லை. அவர் தலைமை தாங்கி நடத்திய காங்கிரஸ் கட்சியையும் நெறிப்படுத்தினார். மெத்தப் படித்தவர்கள், வழக்குரைஞர்கள், செல்வந்தர்கள், செல்வாக்கு மிக்கவர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருந்த காங்கிரஸை, மக்கள் இயக்கமாக மாற்றினார்.

நான்கு அணா செலுத்தினால் எவரும் உறுப்பினர் ஆகலாம் என்ற விதியை

அறிமுகப்படுத்தினார். அந்த விதிதான் வயதுவந்த அனைவருக்கும் வாக்குரிமை என்று அரசியல் அமைப்பு சட்டத்தில் இடம் பெற வழிவகுத்தது. இது ஓர் புதிய அரசியல் புரட்சி!

இந்திய நிலப்பரப்பை நிர்வாக வசதிக்காக பல பகுதிகளாகப் பிரித்திருந்ததை அவர் ஏற்கவில்லை. மாறாக, தான் வழிநடத்திய காங்கிரஸ் இயக்கத்தை, மொழி அடிப்படையில் திருத்தி அமைத்தார். மொழிவாரி மாநில அமைப்பு முறை இந்திய சுதந்திரத்துக்கும் பின்பு பரந்து விரிந்த இத்தேசத்தின் ஒற்றுமையை உணர்வு பூர்வமாக உருவாக்கியது, உறுதி செய்தது.

இந்திய தேச விடுதலைக்கு தடைக்கற்களாக இருப்பவை மதப்பிணக்குகளும், சாதிப்பிரிவினைகளுமே என்பதை அண்ணல் ஆரம்பத்திலேயே உணர்ந்தார். அவர் இந்து மதத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எம்மதமும் அவருக்கு சம்மதமே.

தன் மூத்த மகன் ஹரிலால் இஸ்லாம் மதத்துக்கு மாறினர். அது பற்றி சிலர் கேட்டபோது, 'உண்மையான முஸ்லிம் மது அருந்தக்கூடாது. அதன்படி அவன் மது அருந்தாத உண்மையான முஸ்லிமாக இருந்தால் நான் மகிழ்ச்சி அடைவேன்' என்றார்.

அண்ணலின் வழ்க்கையில் நடந்த ஒரு முக்கிய நிகழ்வு. 1942 இல் காந்திஜியின் 'சேவாகிராமம்' ஆசிரமத்திற்கு அண்ணலின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய லூயிஸ் ஃபிஷர் (Louis Fisher) செல்கிறார். அண்ணல் வசித்த குடிசையில் யேசு கிறிஸ்துவின் படம்

மாட்டப்பட்டிருந்தது. அப்படத்தின் கீழே 'இவரே நமக்கு சாந்தி அளிப்பவர்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது.

அதைக் கண்டவுடன் லூயி ஃபிஷர், 'நீங்கள் ஒரு கிறிஸ்தவரா' எனக்

கேட்டார். அதற்கு காந்திஜி, 'ஓம், நான் ஒரு கிறிஸ்தவன். அது மட்டுமல்ல, நான் ஒரு ஹிந்து, ஒரு முஸ்லிம், ஒரு யூதன். எம்மதமும் எனக்குச் சம்மதமே' என்றார். அப்படிச் சொன்னதோடு, நாள்தோறும் நடைபெறும் பிரார்த்தனைக் கூட்டங்களில், ஹிந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மத துதிப்பாடல்கள் இடம் பெறச் செய்தார்.

தென்னாப்பிரிக்காவில் அண்ணல் நடத்திய சத்தியாகிரகப் போராட்டத்தில் அனைத்து மதத்தினரும் பங்கேற்றார்கள். அண்ணலை தென்னாப்பிரிக்காவுக்கு அழைத்துச் சென்றவரே தாதா அப்துல்லா சேட் என்ற இஸ்லாமியர்தான். அங்கிருந்த இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருமே அண்ணலுக்குப் பின்னால் அணிவகுத்து நின்றார்கள். அவர்களில் அண்ணலுக்கு உதவுவதற்காக தனது சொத்து, சுகம் அனைத்தையும் இழந்தவர் அகமது முகமத் கச்சாலியா என்கிற இஸ்லாமியர்.

கிறிஸ்தவர்களில் ஜோசப் ராயப்பன், வின்சென்ட் லோரன்ஸ் போன்ற பலரும், ஹிந்துக்களில் மகன்லால், தில்லையாடி வள்ளியம்மை, நாராயணசாமி, நாகப்பன் – போன்றோரும் இணைந்து போரடினார்கள். அனைத்து மதத்தினருக்கிடையேயும் வெளிநாட்டில் ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துவது சாத்தியமென்றால் இந்தியாவிலும் அது சாத்தியமே என எண்ணினார் அண்ணல். ஆகவே மதநல்லிணக்க அணுகுமுறைக்கு அடித்தளம் போட்டவர் அவர். இது ஒரு புரட்சிகரமான செயல் அல்லவா?

அதே வேளையில் அண்ணல் கையில் எடுத்த அறப்போர், தீண்டாமை ஒழிப்பு என்பது. 'பிறப்பால் அனைவரும் சமமே. ஒருவர் செய்யும் தொழிலால் பேதம் காட்டுவது பெரும்பாவம்' என்றார் அவர். ஹரிஜன மக்களை 'ஆண்டவனின் குழந்தைகள்' என்றார். 'ஹரிஜன சகோதரர்களை உள்ளே அனுமதிக்காத கோயிலுக்குள் நான் நுழைய மாட்டேன்' என்றார். ஆட்சி அதிகாரத்தில் அவர்களுக்கு பங்கு அளிக்கப்படவேண்டுமென வலியுறுத்தினார். ஹரிஜனப் பெருமக்களுக்கு உரிய அளவில் தொகுதி ஒதுக்கீடு பெற்றுத்தர உண்ணாநோன்பு மேற்கொண்டார்.

புகழ்பெற்ற புனே ஒப்பந்தத்தின் மூலம் அம்பேத்கரையும் அரவணைத்துத் திருப்திப்படுத்தினார். பிற சமுதாய மக்களையும் அதற்கு இணங்க வைத்தார். இவ்வாறு சாதி பேதமற்ற சமுதாயத்தை உருவாக்க ஓயாது உழைத்த ஓர் உண்மையான போராளி அவர்.

காந்திஜி, 'தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் சிலரிடம் மட்டுமே அதிகாரத்தைக் கொடுத்துவிட்டு, மற்றவர்கள் கைகட்டி வாய்புதைத்து நிற்பது உண்மையான ஜனநாயகம் அல்ல. கொடுக்கப்பட்ட அதிகாரம் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது எனத் தெரிந்தால், அதனை எதிர்த்துப் போராடும் துணிவு சாதாரண மனிதனுக்கும் எப்பொழுது வருகிறதோ, அப்பொழுதுதான் உண்மையான ஜனநாயகம் மலர்ந்ததாகச் சொல்வேன்' என்றார். இவ்வாறு ஜனநாயகத்திற்கு ஓர் புதிய விளக்கம் தந்த புரட்சியாளர் அவர்.

அவர் சிறந்த பத்திரிகையாளரும் பதிப்பாசிரியரும் ஆவார். 'இந்தியன் ஒப்பீனியன்', 'ஹரிஜன்' ஆகிய பத்திரிகைகளை – விளம்பரம் எதுவும் வெளியிடாமல் – நடத்தினார். அப்பத்திரிகைகள், தனது கருத்துகளை, போராட்ட வியூகங்களை வெளியிடும் சாதனங்களாகவும், மக்களை நல்வழிப்படுத்தும் கருவிகளாகவும் செயல்பட வேண்டும் என்றார். பத்திரிகைகள் தங்கள் கடமையை உணரவேண்டும். மக்கள் நலனை முன்வைத்தே செயல்பட வேண்டும் என்றார்.

சில பத்திரிகைகளின் செயல்பாட்டைக் கண்டு மனம் வருந்திய மகாத்மா, 'இன்று பத்திரிகைகள் நடமாடும் பிளேக் நோயாக (walking plauge) உள்ளன. இந்தியாவின் வைஸ்ராய் பதவிக்கு என்னை ஒரே ஒரு நாள் மட்டும் நியமித்தால், அனைத்து பத்திரிகைகளையும் தடை செய்வேன்' என்று கூறிவிட்டு, சிறிது நேர இடைவெளிக்குப் பின்பு 'ஹரிஜன் இதழுக்கு மட்டும் விதிவிலக்கு அளிப்பேன்' என்று சிரித்துக்கொண்டே சொன்னார். அண்ணல் கூறியதன் பொருள், 'பத்திரிகை என்றால் அது ஹரிஜன் இதழைப் போல் இருக்க வேண்டும்' என்பதே.

ஆங்கிலேயரான சி.எஃப். ஆண்ட்ரூஸ் என்ற கிறிஸ்தவ பாதிரியார், அண்ணலின் வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்டவர். தென்னாப்பிரிக்கா சென்று அண்ணலின் ஃபீனிக்ஸ் ஆசிரமத்தில் வசித்தவர். அண்ணலை 'மோகன்' என்று பெயர் சொல்லி அழைக்கும் அளவுக்கு நெருக்கமானவர். ஒரு நாள் அண்ணல் அவரை நோக்கி 'பைபிளில் உங்களுக்கு மிகவும் பிடித்தமான வாசகம் என்ன' எனக் கேட்டார். அதற்கு ஆண்ட்ரூஸ் 'பகைவனையும் நேசிக்க வேண்டும் என்ற வாசகம்தான்' என்றார். அதற்கு காந்திஜி, 'எனக்குப் பகைவனே இல்லையே' என்று கூறினார். அதனைக் கேட்ட ஆண்ட்ரூஸ் காந்திஜியின் கைகளைப் பற்றிக் கொண்டு, 'இன்று முதல் நான் உங்கள் சீடன்' என்று கூறினார். எவரிடமும் தனக்குப் பகைமை இல்லை என வாழ்ந்து காட்டிய நவயுக புரட்சியாளர் காந்திஜி.

1948 ஜனவரி 30 ஆம் நாளன்று துப்பாக்கி குண்டுக்குப் பலியாகி அண்ணலின் உயிர் பிரிந்தது. ஆனால் இந்திய மண்ணில், தான் வாழ்ந்த 33 ஆண்டு காலத்தில் அவர் ஏற்படுத்திய மாற்றங்கள் மகத்தானவை. அவர் விட்டுச் சென்ற போதனைகள், ஒட்டுமொத்த உலகுக்கும் வழிகாட்டக் கூடியவை. அவை புனிதமானவை, புரட்சிகரமானவை.

தனிப்பட்ட வாழ்க்கை, பொது வாழ்க்கை, அரசியல் நடைமுறை, மத நல்லிணக்கம், ஜாதி பேதமில்லா சமுதாய அமைப்பு என்று சமுதாயத்தின் அனைத்துத் தளங்களிலும் மாற்றத்தை ஏற்படுத்திய அகிம்சைப் புரட்சியாளர் ஆவார் மகாத்மா காந்தி!

அந்த புரட்சியாளரை சரியாகப் புரிந்து கொண்ட கவிஞர் தாகூர், 'வரும் தலைமுறைக்குத் தன் வாழ்க்கையை ஒரு படிப்பினையாக்கிய உத்தமர் இவர் என்பதை உலகம் நினைவு கொள்ளும்' என்றார்.

மதமோதல்களால் மாய்ந்து போகாமல், சாதிச் சண்டைகள் சாய்ந்து போகாமல், சில சறுக்கல்களுக்கு இடையேயும் இந்தியா ஜனநாயக நாடாக இன்றும் தொடர்கிறது என்றால் அதற்கு, புரட்சியாளர் அண்ணல் போட்ட விதையே காரணம்.

(கட்டுரையாளர் ஒரு காந்தியவாதி)

# MH 370 மலேசிய விமானத்திற்கு என்ன நடந்தது?

மலேசிய தலைநகர் கோலாலம்பூரிலிருந்து நள்ளிரவு புறப்பட்ட MH 370 விமானம், அதன் இலக்கான பீஜிங்கை சென்றடைவில்லை. இதனால், பீஜிங் விமான நிலையத்தில் MH 370 விமானத்தில் பயணித்திருந்தவர்களை அழைப்பதற்காக காத்துக் கொண்டிருந்த உறவினர்கள் பதற்றத்துக்கு உள்ளாகினர். நேரம் செல்லச் செல்ல விமான நிலையத்தில் அழுகை சத்தங்கள் ஆக்கிரமிக்க தொடங்கின. எனினும், விமானத்தின் நிலை குறித்து உறுதியான தகவலை அப்போது மலேசிய அரசும் தெரிவிக்கவில்லை. சீன அரசும் தெரிவிக்கவில்லை. தொடர்ந்து MH 370 விமானம் தாமதம் என்றே கூறப்பட்டு வந்தது. இறுதியில், விமானத்துறை அதிகாரிகள் முடிவுக்கு வந்தனர். கோலாலம்பூரிலிருந்து 239 பேருடன் புறப்பட்ட MH 370 விமானம் மாயமானதாக அறிவிக்கப்பட்டது. உலக நாடுகள் அதிர்ச்சி அடைந்தன. இது நடந்த தினம் மார்ச் 8, 2014.

MH 370 விமானம் மாயமாகி 9 ஆண்டுகள் நெருங்கவுள்ளது. ஆனால், இதுவரை மாயமான விமானம் என்ன ஆனது என்ற தகவல் உறுதியாக தெரிவிக்கப்படவில்லை. இன்னமும் விமானத்தில் பயணித்த 239 பேரின் உறவினர்கள் ஆறாத வலியுடன் தங்களது நாட்களை நகர்த்தி வருகின்றனர். எனினும், என்றாவது ஒரு நாள் MH 370 விமானத்துக்கு என்ன ஆனது, எங்கு விழுந்தது போன்ற தகவல்கள் தங்களை வந்தடையும் என்று அவர்கள் நம்புகின்றனர். அவர்களின் நம்பிக்கை நிறைவேறுமா?

மெய்நிகர், செயற்கை நுண்ணறிவு என அறிவியல் வளர்ச்சி உச்சத்தை தொட்டுக் கொண்டிருக்கும் இந்த நூற்றாண்டில் சுமார் 239 பேர்களுடன் பயணித்த விமானம் என்ன ஆனது என்பதை 9 ஆண்டுகளாக கண்டறியமுடியவில்லை என்றால், உங்களால் நம்ப முடிகிறதா? இந்த விவகாரத்தில் பரந்த பார்வையில் சிந்தித்தால், எங்கோ ஒரு புள்ளியில் உண்மை வேண்டும்மென்றே மறைக்கப்பட்டிருப்பதை நம்மால் உணர முடிகிறது. ஆனால், இந்த உண்மையும் நாம் அறிவியல் மூலம்தான் கண்டறிய முடியுமே தவிர, இங்கு சதி கோட்பாடுகளால் அல்ல..!



உண்மையில் MH 370 விமானம் மாயமான சமயத்தில் மோசமான வானிலையால் விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கருதப்பட்டது. பின்னர், விமானம் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு இந்தியப் பெருங்கடலில் விழுந்ததாக கூறப்பட்டது. ஆனால், இவற்றுக்கு சாத்தியங்கள் இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் விளக்கிய நிலையில், விமானத்தின் சிக்னல் தொடர்பற்று இந்தியப் பெருங்கடலில் விழுந்திருக்கலாம் எனக் கணிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இந்தியப் பெருங்கடலில் சுமார் 1,20,000 சதுரகிலோமீட்டர் பரப்பில் தேடுதல் வேட்டையை மேற்கொண்டது ஆஸ்திரேலியாவின் இணை ஒருங்கிணைப்பு மையம். நீண்ட நாட்கள் தேடுதலுக்குப் பின்னரும் இதனால் எந்தப் பலனும் கிடைக்கவில்லை. ரேடார்களும், சேட்டிலைட்டுகளும் MH 370 விமான விபத்தை கணிக்கத் தவறின.

**இந்து குணசேகர்**

MH 370 விமானம் காணாமல்போன நாள் முதலே பல புதிர்கள் அந்த விமானத்தை சுற்றி வலம் வந்தன. அவற்றில் ஒன்று, அவ்விமானத்தில் போலி விசாவில் பயணித்த இரண்டு ஈரானிய இளைஞர்கள் விமானத்தைக் கடத்தி இருக்கலாம் எனக் கூறப்பட்டது. பின்னர், அதில் உண்மையில்லையென ஆரம்பத்திலேயே நிராகரிக்கப்பட்டது. அடுத்தது விமானத்தில் சீன தொழில்நுட்ப நிறுவனத்தை சேர்ந்த 20 பேர் பயணித்திருந்தனர். அவர்களது பயணப்பைகளில் இருந்த லித்தியம் பேட்டரி உருகி, தீ விபத்து ஏற்பட்டு நடுவானில் விமானம் வெடித்திருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

அடுத்த சந்தேகம் விமானத்தின் பைலட்கள் மீது எழுந்தது. ஆர் 370 விமானத்தின் தலைமை விமானி சஹாரி அகமத் ஷா. விமானம் செலுத்துவதில் பல ஆண்டுகள் அனுபவம் உள்ள ஷா மன அழுத்தத்தின் காரணமாக நடுவானில் தற்கொலைக்கு முயன்று விமான விபத்தை ஏற்படுத்தினாரா என்றும் அதிகாரிகள் கேள்விகள் எழுப்பினர். அதற்கும் விடையும் கிடைக்கவில்லை.

மேலும். MH 370 விமானத்தின் பாகங்கள் என்று கூறப்பட்ட பொருட்கள் மாலத்தீவு, மடாஸ்கர் பகுதியில் கிடைத்தன. ஆனால், அவை MH 370 விமானத்தின் பாகங்கள்தானா என்பதை இதுவரை உறுதியாக தெரிவிக்கப்படவில்லை.

இறுதியாக, விமானம் காணாமல்போன ஆண்டிலிருந்து இந்த முனை மட்டும் பொதுவெளியில் விவாதிக்கப்படாமல் மறைமுகமாகவே விவாதிக்கப்பட்டது. அது 'டியாகோ கார்சியா' (Diego Garcia). இந்தியப் பெருங்கடலில் அமைந்துள்ளது இந்த 'டியாகோ கார்சியா' தீவு. மாலத்தீவுகளிலிருந்து 2,000 கிமீ தொலைவில் இந்த தீவு அமைந்திருக்கிறது. பவள பாறைகள் நிறைந்துள்ள இந்தத் தீவு பொதுமக்கள் பார்வையிலிருந்து சற்று தள்ளி இருந்தாலும் அமெரிக்காவின் முக்கிய இராணுவ தளமாக பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. இராக், சிரியா, ஆப்கானிஸ்தானுக்கு இங்கிருந்துதான் அமெரிக்காவின் போர் விமானங்கள் பயணிக்கின்றன. உலகப் பார்வையில்

இது அமெரிக்காவின் இரகசியமான இராணுவ தளமாகவே இருந்து வருகிறது.

சரி, நாம் மையத்துக்கு வருவோம். “MH 370 விமானத்தை ஒருவேளை தீவிரவாதிகள் கடத்தி ‘டியாகோ கார்சியா’ தீவுக்கு செல்ல முயன்றபோது அமெரிக்க இராணுவம் விமானத்தை சுட்டு வீழ்த்தி இருக்கலாம். அதைத் தவிர, அமெரிக்காவுக்கு வேறு வாய்ப்பும் அங்கு இல்லை!” இதைதான் சர்வதேச நிபுணர்கள் பலரும் மறைமுகமாக நம்பி வருகின்றனர்.

எனினும், அவர்களது நம்பிக்கைகளுக்கு பல காரணங்கள் கூறபடுகின்றது. MH 370 விமானம் மாயமானபோது உலக நாடுகள் பலவும் கருத்து தெரிவித்த நிலையில், அமெரிக்கா முன்னுக்குப் பின் முரணாக அமைதி காத்தது. அமெரிக்காவின் மௌனம் சர்வதேச அரங்கில் பல கேள்விகளையும் எழுப்பியது. மேலும், விமான விபத்தை தொடர்ந்து அப்போது அமெரிக்க அதிபராக இருந்த ஒபாமா, மலேசியாவுக்கு முதல் முறையாக பயணம் மேற்கொண்டார். MH 370 விமான விபத்தை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு ஒபாமாவின் இப்பயணமும் பல கேள்விகளை எழுப்பியது. ஆனால், இவை எல்லாமே சாத்தியக்கூறுகள்தான். அதாவது, இது உண்மையாகவும் இருக்கலாம், பொய்யாகவும் இருக்கலாம்.

ஆனால், ஒருவேளை இது உண்மையாக இருக்கும் பட்சத்தில் அமெரிக்கா பல எதிர்வினைகளை சந்தித்திருக்கும். கடந்த ஆண்டு ஈரான், உக்ரைன் நாட்டுக்கு சொந்தமான விமானத்தை தவறுதலாக சுட்டு வீழ்த்தியது. இதில் பயணித்த 170 பயணிகளும் உயிரிழந்தனர். இந்த விவகாரம் சர்வதேச அரங்கில் சர்ச்சையையும், அதிர்வலையும் ஏற்படுத்தியது.

அப்போது அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் ஈரானை கடுமையாக விமர்சித்தனர். அந்தச் சூழலில் ‘டியாகோ கார்சியா’ சம்பவம் உண்மையாக இருப்பின், நிச்சயம் ஈரானும், ரஷ்யாவும் சர்வதேச நீதிமன்றத்தில் அமெரிக்காவை ஏற்ற தயங்கி இருக்காது. இவை நடக்கவில்லை. அப்படி என்றால், இதில் அமெரிக்காவுக்கு சம்பந்தம் இல்லை என நாம் கொள்ளலாமா?

இவ்வாறு மாயமான MH 370 விமானத்தைச் சுற்றிய சந்தேகங்கள் கேள்விக்குறிகளாகவே தொடர்ந்து வருகின்றன.

நீல, சிவப்பு நிற கோடுகளை கொண்ட அந்த பிரமாண்டமான விமானம் எங்கு சென்றிருக்கும். எப்படி தடையங்கள் இல்லாமல் இந்த பூமியிலிருந்து மாயமாகி இருக்கும். அதில் பயணித்தவர்களுக்கான நீதி எங்கே? இதற்கான விடைகளை கூறாமலே தீர்க்கப்படாத வழக்காக மலேசிய அரசு முடித்து வைத்திருக்கலாம். ஆனால், காலமும் அறிவியலும் இதற்கான விடையை நிச்சயம் அளிக்கும்.

# உலகின் மிகப் பெரிய வெப்பப் பாலைவனம்!



சஹாரா பாலைவனம் பூமியின் மிகப்பெரிய வெப்பப் பாலைவனம். ஆப்பிரிக்கக் கலாச்சாரம், வரலாறு போன்றவற்றில் சஹாரா முக்கியப் பங்கு வகித்துள்ளது.

சஹாரா பாலைவனம் வட ஆப்பிரிக்காவில் உள்ளது. இது அட்லாண்டிக் பெருங்கடலில் இருந்து செங்கடல் வரை வட ஆப்பிரிக்காவின் பெரும் பகுதியை உள்ளடக்கியது. எகிப்து, லிபியா, துனிசியா, அல்ஜீரியா, மொரோக்கோ, மேற்கு சஹாரா, மொரிட்டானியா, மாலி, நைஜர், சாட், சூடான் உள்ளிட்ட பதினோரு நாடுகளின் பகுதிகளை சஹாரா உள்ளடக்கியிருக்கிறது.

சஹாரா பாலைவனம் 3,629,360 சதுர மைல்கள் பரப்பளவைக் கொண்டது. கிழக்கிலிருந்து மேற்காக 4,800 மைல்கள் நீளமும், வடக்கிலிருந்து தெற்காக 1,118 மைல் அகலமும் கொண்டது. இது மேலும் மேலும் வளர்ந்து வருகிறது.

சஹாரா ஒரு நாடாக இருந்தால், அது உலகின் ஐந்தாவது பெரிய நாடாக இருக்கும். பிரேசிலைவிடப் பெரியது, அமெரிக்காவைவிடச் சற்று சிறியது.

சஹாரா பாலைவனம் பூமியில் மிகவும் வெப்பமான இடங்களில் ஒன்று. கோடைகாலத்தில் சராசரி வெப்பநிலை 100.4°F (38°C) – 114.8°F (46°C) வரை இருக்கும். சில பகுதிகளில் வெப்பநிலை தொடர்ச்சியாகப் பல நாட்களுக்கு அதிகமாக இருக்கும்.

சஹாராவின் வெப்பநிலை எந்த ஓர் உயிரினமும் வாழ்வதற்கு கடினமான சூழலாக இருக்கிறது. இது சூடாகவும் வரண்டதாகவும் இருக்கும். பகலில் வெப்பம் அதிகமாக இருந்தாலும், இரவில் வெப்பநிலை வேகமாகக் குறையும். சில நேரம் உறைபனிக்குக் கீழே இருக்கும். சஹாராவில் அரிதாகவே மழை பொழியும். சில பகுதிகளில் ஒரு துளி மழையைப் பார்க்க, பல ஆண்டுகள்கூட ஆகும்.

சஹாரா பாலைவனம் பல்வேறு வகையான நிலப்பரப்புகளால் ஆனது. பெரும்பாலான பகுதி பாறைகளால் ஆனது. குன்றுகளும் மணல் குன்றுகளும் அதிகமாக இருக்கின்றன. சஹாராவில் உள்ள சில குன்றுகளின் உயரம் சுமார் 500 அடி. மணல், கடினமான சரளைக்கற்களால் மூடப்பட்ட சமவெளிப் பகுதிகளும்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# “உயிர் காக்க நாங்கள் இருக்கிறோம்” - இத்தாலிக்குக் கைகொடுத்த கியூபா



ஐரோப்பிய நாடுகளில் ஒன்றான இத்தாலியில் பல மருத்துவமனைகள் மூடப்படுவதைத் தவிர்க்க கியூபாவில் இருந்து மருத்துவர்களை அந்நாட்டு அரசு அழைத்துள்ளது. ஜி–7 நாடுகளில் ஒன்றான இத்தாலியில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதித்துக் கொண்டதன் விளைவாக கடுமையான பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொரோனா பாதிப்பிலிருந்து முழுமையாக விடுபடாத நிலையில், இத்தாலியின் மருத்துவ மனைகள் படுமோசமான நிலையில் உள்ளன. மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ஊழியர்கள் இல்லாத காரணத்தினால் மருத்துவமனைகளை இழுத்து மூட வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டனர்.

இந்நிலையில் கியூபாவில் இருந்து மருத்துவர்களை அனுப்பி உதவ வேண்டும் என்று இத்தாலி கோரிக்கை விடுத்தது. அதை உடனடியாக ஏற்றுக் கொண்ட கியூப அரசு 51 மருத்துவர்கள் கொண்ட குழுவை அனுப்பி வைத்துள்ளது. இத்தாலியில் உள்ள மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள் பற்றாக்குறையைப் போக்கும் வகையில் கியூப மருத்துவர்களின் பணிகள் அமையும் என்றும், அந்த அடிப்படையில் இத்தாலியின் கலப்ரியா (Calabria) மாகாண நிர்வாகத்திற்கும், கியூபா மருத்துவ சேவைகள் அமைப்பிற்கும் இடையில் உடன்பாடு கையெழுத்தாகியுள்ளது.

இது குறித்துக் கருத்து தெரிவித்த கியூப மருத்துவக்குழுவின் தலைவர் லூயிஸ் பெரஸ்–உல்லோவா (Luis Perez-Ulloa), “இது ஒரு நல்ல ஒத்துழைப்பு மாதிரியாகும். பிற ஐரோப்பிய நாடுகளுக்கும் மகிழ்ச்சியோடு விரிவுபடுத்தத் தயாராக இருக்கிறோம். 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இரண்டு மருத்துவர் குழுக்கள் இத்தாலிக்கு வந்து கொரோனாவை எதிர்கொள்ளப் பெரும் பணியைச் செய்தன. அந்தப் பணிதான் கலப்ரியா மாகாண நிர்வாகத் தலைவர் ரொபர்ட்டோ ஓச்சுய்ட்டோவின் (Roberto Occhiuto) மனதில் தாக்கத்தை ஏற்படுத்தியது” என்றார். மருத்துவ சேவையை ஆற்றுவதற்காக எவ்வளவு விரைவில் இத்தாலி மொழியைக் கற்றுக் கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாக அதையும் கற்றுக் கொள்வார்கள் என்றும் தெரிவித்தார்.

தற்போது கையெழுத்தான உடன்பாட்டின்படி, 2023 ஆம் ஆண்டின் நிறைவிற்குள் மேலும் 440 மருத்துவ சிறப்பு வல்லுநர்களை கியூபாவில் இருந்து அழைத்து வரப் போகிறார்கள். உயிர் காக்கும் சிகிச்சைகளை இவர்கள் மேற்கொள்ள உள்ளனர். கியூப மருத்துவர்களை அழைத்து வருவதைத் தடுக்க சில வலதுசாரி அரசியல்வாதிகள் முயற்சிகளை செய்தனர். பற்றாக்குறை தீரும் வரையில் கியூப மருத்துவர்களின் உதவியை நாடு வதைத் தவிர வேறு வழியில்லை என்று நிர்வாகம் உறுதியாக நின்று விட்டது. சமூக ஆர்வலர்களும் பல கேள்விகளை எழுப்பியுள்ளார்கள். ‘ஜி–7 நாட்டில் மருத்துவம் மற்றும் சுகாதாரம் இவ்வளவு மோசமாக எப்படி இருக்கிறது?’ ‘இங்குள்ள மருத்துவத்துறையை முடுக்கி விட கியூபாவில் இருந்து மருத்துவர்கள் ஏன் தேவைப்படுகிறார்கள்?’ ‘இதற்கிடையில் உக்ரைனுக்கு 7 ஆயிரத்து 600 கோடி அமெரிக்க டொலர் மதிப்பிலான ஆயுதங்களை உக்ரைனுக்கு நாம் அனுப்பிக் கொண்டிருக்கிறோமே?’ என்று கேள்விகள் கேட்டுள்ளனர்.

## 200 கோடி சிகிச்சைகள்

1959 ஆம் ஆண்டில் கியூபாவில் சர்வாதிகார ஆட்சியைக் கவிழ்த்து விட்டு, புரட்சிகர ஆட்சி அமைந்ததில் இருந்தே கியூப மருத்துவர்கள் உலகம் முழுவதும் பயணம் செய்து சிகிச்சை அளித்து வருகிறார்கள். நில நடுக்கம், தொற்று நோய், வெள்ளத்தின் பின் ஏற்படும் சுகாதாரக்கேடு உள்ளிட்ட பல்வேறு நெருக்கடிகளின போதும், ஏராளமான நாடுகளுக்கு கியூபா உதவி வருகிறது. தென் அமெரிக்க நாடுகளில் கண்ணொளித் திட்டம் கியூபாவின் உதவியோடு அரங்கேறி வருகிறது. இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் பார்வையை இழக்காமல் இந்தத் திட்டம் பார்த்துக் கொண்டது. கடந்த 64 ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஆறு இலட்சம் கியூப மருத்துவர்கள் 166 நாடுகளில் சேவை ஆற்றியிருக்கிறார்கள். 200 கோடி சிகிச்சைகளை செய்து இதுவரையில் உலகில் யாரும் செய்ய முடியாத சாதனையைச் செய்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன. இந்த மருத்துவப் பணிகள் அனைத்தையும் கடமையாக நினைத்து செய்திருக்கிறார்கள். வணிக ரீதியான ஒன்றாக இது மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது 56 நாடுகளில் கியூபாவின் 23 ஆயிரத்து 792 மருத்துவர்கள் பல்வேறு மருத்துவப் பணிகளைச் செய்து வருகிறார்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள், மக்கள் இருக்கும் இடங்களுக்கே சென்று சிகிச்சை அளிக்கின்றனர். அப்பகுதிகளில் சிறப்பு முகாம்கள் அமைக்கப்படுகின்றன. அங்கேயே தேவைப்படும் மருந்துகள் வழங்கவும், சிறிய அறுவை சிகிச்சைகள் செய்யும் ஏற்பாடுகள் உள்ளன. இத்தகைய அற்புதமான பணிகளைச் செய்து வரும் கியூபாவை பயங்கரவாதத்திற்கு உதவி தரும் நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா வைத்திருக்கிறது. கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமெரிக்காவின்

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

# தாய்மொழி நாள் உலகுக்கு உணர்த்தும் பாடம்

பெப்ரவரி 21. அன்று உலகத் தாய்மொழி நாள் உலகெங்கிலும் கொண்டாடப்படுகிறது. இதற்கான விதை மிகச் சரியாக இற்றைக்கு 71 ஆண்டுகளுக்கு முன்னால் இன்றைய வங்கதேசத்தில் போடப்பட்டது என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும்.

1947 ஓகஸ்ட் மாதத்தில் இந்தியா–பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிந்தபோது, மேற்கு–கிழக்கு பாகிஸ்தானின் மொத்த மக்கள் தொகை 6.9 கோடி. இதில் 4.4 கோடிப் பேர் கிழக்குப் பாகிஸ்தானில் வசித்தனர். அவர்களின் தாய்மொழி வங்காளியாக இருந்த அதேநேரத்தில், மேற்கு பாகிஸ்தானில் இருந்த மக்கள் உருது, பஞ்சாபி, பஷ்டோ, சிந்தி ஆகிய மொழிகளைப் பேசுபவர்களாக இருந்தனர். கிழக்கிந்திய கம்பெனி, பிரிட்டிஷ் ஆட்சி என காலனிய ஆட்சியின் தலைமைப் பீடமாக வங்காளம் நீண்ட காலம் இருந்துவந்த நிலையில், இயற்கையாகவே கிழக்குப் பாகிஸ்தான் பகுதி பொருளாதார உற்பத்தி மட்டுமின்றி, கல்வி உட்படப் பல்வேறு சமூகத் தளங்களிலும் மேற்கு பாகிஸ்தானை விட வெகுவாக முன்னேறிய நிலையில் இருந்தது.

இந்தப் பின்னணியில் 1948 பெப்ரவரி 23 அன்று கூடிய பாகிஸ்தான் அரசியல் நிர்ணய சபை, தனது உறுப்பினர்கள் உருது அல்லது ஆங்கிலத்தில் மட்டுமே பேசலாம் என முடிவெடுத்தது. இதை எதிர்த்த கிழக்கு பாகிஸ்தானைச் சேர்ந்த உறுப்பினர் திரேந்திரநாத் தத்தா 'வங்க மொழியையும் அதில் சேர்க்க வேண்டும்' என்று முன்மொழிந்தார். எனினும், அன்றைய பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலி கான், கிழக்குப் பாகிஸ்தான் முதல்வர் க்வாஜா நசிமுதீன் உள்ளிட்ட பலரின் உதவியுடன் வங்க மொழிக்கு ஆதரவான தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

இதற்கு எதிராக கிழக்கு பாகிஸ்தான் போர்க்கோலம் பூண்டது. 1948 மார்ச் 11 இல் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது. மார்ச் 19 இல் பாகிஸ்தான் அதிபர் முகமது அலி ஜின்னா அரசுமுறைப் பயணமாக டாக்கா வந்து கலந்து கொண்ட இரண்டு நிகழ்ச்சிகளிலுமே, மக்களின் கடுமையான




எதிர்ப்புக் குரல்களுக்கு இடையே, 'பாகிஸ்தானின் அரசு மொழியாக உருது மட்டுமே இருக்கும்' எனத் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து, அரசியல் மட்டத்தில் தொடங்கிய எதிர்ப்பு மாணவர்கள், இளைஞர்கள், அறிவுஜீவிகள் மத்தியிலும் வேகமாகப் பரவியது. இவ்வாறு தாய்மொழியான வங்க மொழிக்கு ஆதரவாக 1948 இல் தொடங்கிய இந்த இயக்கம் தொடர்ந்து வலுப்பெற்று 1952 இல் உச்சம் எய்தியது.

**வீ.பா.கணேசன்**

அந்த ஆண்டு பெப்ரவரி 21 அன்று டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களின் கிளர்ச்சியை ஒடுக்க இராணுவம் நடத்திய தாக்குதலில் ரஃபீக் உதீன் அகமது, அப்துல் ஜப்பார், அப்துல் பரக்கத், அப்துல் சலாம் ஆகிய மருத்துவக் கல்லூரி மாணவர்களோடு, ஒன்பது வயதேயான ரஹியுல்லா என்ற சிறுவன் உட்பட ஐந்து பேர் கொல்லப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் காயமுற்றனர்.

இவர்கள் உயிர்நீத்த அதே இடத்தில் பெப்ரவரி 23 அன்று தியாகிகள் நினைவுச் சின்னம் தற்காலிகமாக உருவானது. அன்றிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அரசின் கடுமையான ஒடுக்குமுறைக்கு இடையே பெப்ரவரி 21இனை மொழிப் போர் தியாகிகளின் தினமாக கிழக்கு பாகிஸ்தான் மக்கள் கடைப்பிடித்து வந்தனர். மக்களின் கடுமையான எதிர்ப்பினை அடுத்து 1956 பெப்ரவரி 16 அன்று பாகிஸ்தானின் அரசு மொழிகளில் ஒன்றாக வங்க மொழி ஏற்றுக்கொள்ளப்பட்டது. எனினும், மேற்கு பாகிஸ்தானின் ஆதிக்க உணர்வு மங்கிவிடவில்லை. பொருளாதாரரீதியாகவும், சமூகரீதியாகவும் கிழக்கு பாகிஸ்தான் மக்களை ஒடுக்கவும், மதரீதியாக அவர்களைப் பிளவுபடுத்தவுமான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு பாகிஸ்தான் மீதான, தொடர்ச்சியான புறக்கணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்துவந்த அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான், அகர்தலா சதிவழக்கில் கைது செய்யப்பட்டு மேற்கு பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்டார். 1970 டிசம்பரில் நடைபெற்ற தேர்தலில் கிழக்கு பாகிஸ்தான் பகுதியின் மொத்தமுள்ள 169 இடங்களில் 167 இடங்களை அவாமி லீக் கட்சி கைப்பற்றி, ஆட்சியைப் பிடிக்கத் தகுதி பெற்றிருந்த நிலையில், "தாங்கள் ஆட்சியமைக்க வழிவிட வேண்டும் புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க வேண்டும்" என்ற முஜிபுர் ரஹ்மானின் கோரிக்கையை பாகிஸ்தான் இராணுவம், பாகிஸ்தான் மக்கள் கட்சி (தலைமை: பூட்டோ) ஆகியவை கடுமையாக எதிர்த்தன.

இவ்வாறு தாய்மொழிக்காகத் தொடங்கிய போராட்டம் படிப்படியாக அரசியல்ரீதியாக வலுப்பெற்று, விடுதலைப் போராக உருமாறியது. இப்போரின்போது கிழக்கு பாகிஸ்தான் மக்களை அடக்கி ஒடுக்க பாகிஸ்தான் இராணுவப் படைகள் கட்டவிழ்த்துவிட்ட வன்முறை வெறியாட்டத்தில் 30

**தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...**

**முன்பக்கத்தொடர்ச்சி…**

நெருக்கடியைத் தீர்த்து விடலாம் என எண்ணுகின்றன. அதாவது, கால் புண்ணை பவுடர் போட்டு மறைத்து விடலாம் என நினைக்கின்றன.

இது 'கடன் வாங்கி கலியாணம்' செய்வதற்கு ஒப்பானது. இந்த வேலையைத்தான் கடந்த 75 ஆண்டுகளாக இலங்கையை ஆட்சி செய்து வந்த அனைத்து அரசாங்கங்களும் செய்து வந்திருக்கின்றன. அவை 75 வருடங்களாகச் செய்து வந்த தவறான ஆட்சி முறைகளின் ஒட்டுமொத்தப் பெறுபேறே இன்றைய பொருளாதார நெருக்கடி. ஆனால், அதை ஏற்க மறுக்கின்ற அதிகாரத்துவ அரசியல் கட்சிகள், ராஜபக்ச குடும்பம் நாட்டைக் கொள்ளையடித்ததால்தான் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது என மலினமாகக் கூறி, இந்த நெருக்கடிக்கான தமது பங்களிப்பை மறைத்துவிட முயல்கின்றன.

ஆனால், நாட்டில் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை எவ்வாறு படிப்படியாக ஏற்பட்டு வந்து உச்ச நிலையை அடைந்தது என்பதை வரலாற்று ரீதியாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்று 75 வருடங்கள் ஆன போதிலும், பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி விட்டுப்போன நிர்வாக மற்றும் பொருளாதார முறையையே நாம் அச்சுப் பிசகாமல் இன்று வரை பின்பற்றி வருகிறோம். அது மட்டுமின்றி, தேசியத்தின் பெயரால் புதிது புதிதாக அநாவசியமான நிர்வாக – பொருளாதாரச் சுமைகளையும் நாமே நம்மீது ஏற்றிக் கொண்டும் உள்ளோம். இலங்கை பரப்பளவில் ஒரு சிறிய நாடு. அதன் சனத்தொகை ஏறத்தாழ இரண்டு கோடி. அதே நேரத்தில் அபரிமிதமான இயற்கை வளங்களையும், உடலுழைப்பும் மூளை உழைப்பு வளமும் கொண்ட மக்களையும் கொண்ட ஒரு நாடு. இருந்தும், இன்று மீள முடியாத நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கிறோம்.

இலங்கை *9* மாகாணங்களையும், *23* மாவட்டங்களையும் கொண்ட ஒரு நாடு. பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் சிறிது காலமும், ஒவ்வொரு மாவட்டத்துக்கும் நிர்வாகம் செய்வதற்கென அரசாங்க அதிபர் தலைமையில் கச்சேரிகள் (இன்று செயலகம்) இயங்கின. அவற்றின் தலைமையில் பிரதேச ரீதியாக காரியாதிகாரி (இன்றைய உதவி அரசாங்க அதிபர்) அலுவலகங்கள் செயற்பட்டன. அவற்றின் கீழ் கிராம அடிப்படையில் விதானைமார் (கிராம சேவை அலுவலர்) இயங்கினர்.

மறுபக்கத்தில், அரசியல் ரீதியாக பாராளுமன்றமும் உள்ளூராட்சி சபைகளும் செயற்பட்டன. பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் அரசியல் கட்சிகள் சார்பாகவும், சுயேட்சையாளர்களாவும் தெரிவு செய்யப்பட்டனர். கிராம சபை, பட்டின சபை, நகர சபை, மாநகர சபை என இருந்த உள்ளூராட்சி சபைகளில் போட்டியிட்டவர்கள் அரசியல் கட்சிகள் சார்பிலன்றி சுயேட்சையாகவே போட்டியிட்டனர்.

தேர்தலில் இன்றிருப்பது போல விகிதாசாரப் பிரதிநிதித்துவ மற்றும் விருப்பு வாக்குத் தெரிவு முறை இருக்கவில்லை. எல்லாத் தேர்தல்களும் நேரடிப் போட்டியாகவே இருந்தன. மக்கள் தமக்கு சேவை செய்யக் கூடியவர்கள் யார் என இனம் கண்டு வாக்களித்துத் தமது பிரதிநிதிகளைத் தேர்வு செய்தனர். இன்றிருப்பது போல் வாக்குகளைப் பெற பணம் கொடுப்பது, தேர்தல் மோசடி, வன் செயல்கள் அன்று பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம்.

ஆனால், இன்றைய நிலைமை என்ன?

அரசியல் கட்டமைப்பு முறையில் எல்லோருக்கும் அதி உயர்ந்தவராக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இருக்கிறார். அவருக்குக் கீழே பாராளுமன்றம் இருக்கிறது. அதற்கடுத்ததாக மாகாண சபைகள் இருக்கின்றன. அவற்றுக்குக் கீழே உள்ளூராட்சி சபைகள் இருக்கின்றன. இவற்றில் பல நூறு உறுப்பினர்கள் அங்கத்தவர்களாக இருக்கின்றனர்.

ஜனாதிபதியைத் தவிர, பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் எனப்படுவோர் இலங்கையின் சனத்தொகை விகிதாசாரத்தை விட அதிகமாக இருக்கின்றனர். இவர்களுக்கான சம்பளங்கள், அலுவலகச் செலவுகள், வாகன வசதிகள், இதர கொடுப்பனவுகள் வசதிகள் என, மாதாந்தம் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபா செலவாகிறது.

அதேபோல, சனத்தொகை விகிதாசாரத்தை மீறிய உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள், கிராம சேவை அலுவலர் பிரவுகள் என்பனவற்றை உருவாக்கியதாலும், இதர அரசாங்க அலுவலகங்கள் ஊழியர்களாலும் மேலும் பல கோடி ரூபா செலவாகிறது. இந்தச் செலவுகள் எல்லாம் மக்களின் வரிப்பணத்தாலும் அல்லது அந்நிய நாடுகளில் வாங்கும் கடன்களினாலும்தான் ஈடு செய்யப்படுகின்றன.

அண்மையில் இலங்கையின் அரச நிர்வாகச் செலவுகள் பற்றிக் குறிப்பிட்ட வெளிநாட்டமைச்சர் அலி சாஃப்ரி, தென்னாசியாவில் உள்ள எமது அயல் நாடுகளான இந்தியாவில் *107* பெருக்கு ஒரு அரச ஊழியரும், பாகிஸ்தானில் *101* பேருக்கு ஒரு அரச ஊழியரும், பங்களாதேசில் *140* பேருக்கு ஒரு அரச ஊழியரும் இருக்கின்ற அதே வேளையில், இலங்கையில் மட்டும் *16* பேருக்கு ஒரு அரச ஊழியர் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அத்துடன், இலங்கையின் வருமானத்தில் *90* சத வீதமானது அரச நிர்வாகச் செலவுகளுக்கே செல்கின்றது என்ற அதிர்ச்சித் தகவலையும் சொல்லியிருக்கின்றார். இது எவ்வளவு ஆபத்தான நிலைமை.

இந்த நிலைமையைத் சீரமைக்காமல் எவர் ஆட்சிக்கு வந்தாலும் இலங்கையின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்ய முடியாது. அதற்குச் செய்ய வேண்டியது என்ன?

முதலில் பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் ஆகியோரின் தொகையைக் குறைக்க வேண்டும். அதேபோல, அளவுக்கதிகமான அரச ஊழியர்களின் தொகையையும் குறைக்க வேண்டும். இவற்றைக் கூறும்போது, 'இவையெல்லாம் சர்வதேச நாணய நிதியம் அல்லது உலக வங்கி கூறும் நிபந்தனைகளா?' எனச் சிலர் வினவக்கூடும். உண்மை அதுவல்ல. இது எமது நிலையை நாம் ஆராய்ந்து எம்மைச் சீரமைப்பதற்காக சுயமாக எடுக்கும் முடிவு.

இப்படியாக, அரச மற்றும் நிர்வாகச் செலவினங்களைக் குறைக்காமல் இருக்கும் வரை இலங்கை தனது நெருக்கடிகளிலிருந்து ஒருபோதும் மீள முடியாது. ஆனால் இன்று ஆட்சியில் இருப்பவர்களுக்கு இத்தகைய தூர நோக்கும், யதார்த்தத்தை உணரும் போக்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அதே நேரத்தில் தம்மிடம் ஆட்சியைத்

தந்தால் நாட்டினதும் மக்களினதும் பிரச்சினைகளை ஒரே நாளில் தீர்ப்போம் என சவடால் அடிக்கும் எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடமோ அல்லது ஜே.வி.பி. இடமோ கூட எந்தவிதமான தீர்வுத் திட்டமும் இருப்பதாகவும் தெரியவில்லை.

இத்தகைய நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமானால் உண்மையான இடதுசாரி சக்திகளின் தலைமையில் ஒரு மக்கள் ஜனநாயக அரசாங்கம் அமைய வேண்டும். ஆனால், இன்றைய சூழலில் இடதுசாரி சக்திகள் மிகவும் பலவீனப்பட்டுப்போய் உள்ளதால், இப்போதைக்கு அதற்கான வாய்ப்பும் இல்லை.

எனவே, இலங்கை தொடர்ந்தும் இருள் சூழ்ந்த ஒரு காலகட்டத்தின் ஊடாகவே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் உள்ளது என்பதுதான் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இன்றைய யதார்த்தம்.

(இலங்கை அரசின் வீண்விரயச் செலவுகளுக்கு ஒரு உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர் பரந்தனில் ஒரு இரசாயனத் தொழிற்சாலை வெற்றிகரமாகச் செயற்பட்டு வந்தது. இலங்கை முழுவதும் செயற்பட்ட ஒரேயொரு இரசாயனத் தொழிற்சாலை அதுதான். அங்கு நூற்றுக்கணக்கான ஊழியர்கள் பணியாற்றி வந்ததுடன், அந்தத் தொழிற்சாலையை நிர்வகிக்க வசதியான அலுவலகமும் அங்கு இருந்தது. அப்படியிருக்க, அந்தத் தொழிற்சாலைக்கென தலைநகர் கொழும்பில் தலைமைக் காரியாலயம் என்ற பெயரில் ஒரு அலுவலகம் பல்லாயிரம் ரூபா செலவில் செயற்பட்டது. பரந்தனில் மட்டும் செயற்பட்ட ஒரு தொழிற்சாலைக்கு கொழும்பில் ஏன் அநாவசியமான அலுவலகம்? இது மாதிரித்தான் எல்லாமே எமது நாட்டில்)

**7ம் பக்கத்தொடர்ச்சி...**

முழுவதும் பயங்கரவாதம் பரவியதற்கு அல் கொய்தாவையும், டேஷ் அமைப்பையும் உருவாக்கியவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். அமெரிக்காதான் இந்தப் பயங்கரவாத அமைப்புகளை உருவாக்கியது. இந்த அமைப்புகளுக்குத் தவறான முகவரியைத் தர வேண்டாம். எதற்கெடுத்தாலும் ஈரான் மீது பழிபோடும் வேலையை அமெரிக்கா நிறுத்திக் கொள்ள வேண்டும்" என்று கூறியுள்ளார்.

எண்ணெய் வளத்தை சுரண்டுவதற்காக அமெரிக்கா பயங்கரவாத அமைப்புகளை உருவாக்கி, பயிற்சி கொடுத்தும் ஆதரவினை தெரிவித்தும் வருகின்றது என்று பல்வேறு விபரங்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. இந்நிலையில் அமெரிக்காவின் கெட்ட நோக்கத்தை மேற்கு ஆசிய நாடுகள் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஈரான் வலியுறுத்தியிருக்கிறது. பல்வேறு சம்பவங்களை மேற்கோள் காட்டியுள்ள ஈரான் வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் நாசர் கனானி (Nasser Kanaani), "இந்தப் பகுதியில் எப்போதும் பதற்றத்தை நிலவச் செய்வதில் அமெரிக்கா பெரும்பங்கு வகித்து வருகிறது" என்று குற்றம் சாட்டியுள்ளார்.

**11ம் பக்கத்தொடர்ச்சி...**

இருக்கின்றன. உப்பு அடுக்குகளாலான பகுதிகளும் உள்ளன. பாலைவனச் சோலைகளும் இருக்கின்றன.

பாலைவனத்தில் வாழ்வது கடினம் என்றாலும், சஹாராவில் சில முக்கியமான நாகரிகங்கள் உருவாகியுள்ளன. சஹாரா முழுவதும் சுமார் 25 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஒட்டகத்தில் பயணம் செய்கின்றனர். சஹாராவில் அதிகம் பேசப்படும் மொழி அரபு.

'சஹாரா' என்றால் அரபு மொழியில் பாலைவனம் என்று அர்த்தம்.

முன்பொரு காலத்தில் சஹாரா, தாவரங்களும் விலங்குகளும் வாழ்ந்த பசுமையான பகுதியாக இருந்திருக்கிறது. சுமார் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரண்டு போக ஆரம்பித்தது.

**12ம் பக்கத்தொடர்ச்சி...**

வெளியுறவுத்துறை அமைச்சர் அன்ரனி பிளிங்கென் (Anthony Blinken) கொலம்பியாவிற்கு பயணம் மேற்கொண்டார். அங்கு அவர் அந்நாட்டின் ஜனாதிபதி குஸ்ரவோ பெட்ரோவை (Gustavo Petro) சந்தித்தார். கியூபாவை பயங்கரவாதப் பட்டியலில் இருந்து எடுக்குமாறும், பல நாடுகளுக்கு உதவி செய்து வரும் கியூபாவை அப்படிப்பட்ட பட்டியலில் வைத்திருப்பது கூடாது என்றும் குஸ்தவோ பெட்ரோ, பிளிங்கெனிடம் வலியுறுத்திப் பேசியுள்ளார்.

**13ம் பக்கத்தொடர்ச்சி...**

இலட்சம் பேர் படுகொலை செய்யப்பட்டனர் 3 இலட்சம் பெண்கள் மிகக் கொடூரமான வகையில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாயினர். கிழக்கு பாகிஸ்தானில் காலம்காலமாக இருந்து வந்த கட்டமைப்பு வசதிகள் முற்றிலுமாகத் துடைத்தெறியப்பட்டன.

ஒருவகையில், இதை இன ஒழிப்பு நடவடிக்கை என்றே கூறிவிடலாம். வங்கதேசம் உருவாகி 51 ஆண்டுகள் ஆனபிறகும் கூட இந்த இன ஒழிப்பு நடவடிக்கைக்கு பாகிஸ்தான் இன்றுவரை வருத்தம் தெரிவிக்கவில்லை என்பதோடு, இனப் படுகொலை குற்றவாளிகள் என்று அடையாளம் காணப்பட்ட 195 போர்க் குற்றவாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இறுதியில், உலகிலேயே முதன்முறையாக ஒரு மொழியின் அடிப்படையில் வங்கதேசம் என்ற தனியொரு நாடு உருவாக வழிவகுத்தது. இந்தப் பின்னணியில்தான் தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் சர்வதேசக் கலாச்சார அமைப்பான யுனெஸ்கோ, வங்கதேசத்தின் மொழிப் போர் தொடங்கிய பெப்ரவரி 21 இனை உலகத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாட வேண்டும் என 1999 நவம்பர் 17 இல் தீர்மானம் நிறைவேற்றியது. பின்பு, ஐக்கிய நாடுகள் சபையும் தனது உறுப்புநாடுகள் இதைக் கொண்டாட வேண்டுமென பொது அவையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இதையடுத்து 2000 ஆம் ஆண்டு முதல் உலகம் முழுவதும் பெப்ரவரி 21 ஆம் திகதி 'பன்னாட்டுத் தாய்மொழி நாள்' ஆகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

வங்கதேச மக்களின் வீரமிக்க மொழிப் போராட்டத்தில் உயிர் நீர்த்தவர்களின் நினைவாக பெப்ரவரி 21 அன்று கொண்டாடப்படும் ஒவ்வொரு தாய்மொழி நாளும் உலகத்துக்குச் சொல்லும் பாடம் இதுதான்:
"தேசிய இனங்களுக்கான உரிமைகளை, அவர்களது மொழி, பண்பாடு ஆகியவற்றை, ஒற்றை ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவரத் துடிக்கும் எந்தவொரு அரசும் இறுதியில் சிதறுண்டு போனதையே உலக வரலாறு நிரூபித்துள்ளது. எனவே, பன்முகத் தன்மையைப் பாதுகாத்திடுங்கள்!"

# ஈரான் உலகின் பழமையான நாடு



உலக மக்கள்தொகை மதிப்பாய்வு (World Population Review - WPR) பட்டியலின்படி, உலகின் முதல் அரசாங்கம் ஈரானில் கி.மு 3200 இல் நிறுவப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ஈரான் உலகின் மிகப் பழமையான நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா இந்த பட்டியலில் 7 ஆவது இடத்தில் உள்ளது. இந்தியாவின் ஆரம்பகால அரசாங்கமானது கி.மு 2000 ஆண்டு நிறுவப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகை மதிப்பாய்வு வெளியிட்டுள்ள பட்டியலில் உலகின் பழமையான நாடுகளின் வரிசையின்படி, ஈரான் 3200, எகிப்து 3100, வியட்நாம் 2879, ஆர்மேனியா 2492, வட கொரியா 2333, சீனா 2070, இந்தியா 2000, ஜோர்ஜியா 1300, இஸ்ரேல் 1300, சூடான் 1070 மற்றும் ஆ:ப்கானிஸ்தான் 678 கி.மு ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஈரானில் என்ன இருக்கிறது?**

மேற்கு ஆசியாவில் உள்ள ஓர் இஸ்லாமிய குடியரசு நாடு ஈரான். ஈராக், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகியவை இதன் அண்டை நாடுகளாக உள்ளன. ஆரம்பத்தில் ஈரான் நாடானது பாரசீகம் என்று அழைக்கப்பட்டது. இதன் தலைநகராக தெஹ்ரான் உள்ளது.

நிலப்பரப்பின் அடிப்படையில் உலகின் 17 ஆவது மிகப்பெரிய நாடாக ஈரான் உள்ளது. இங்கு 86 மில்லியன் மக்கள் வசித்து வருகின்றனர்.

ஈரான் உலகின் மிக பழைமையான நாகரிகங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. கி.மு 3200 ஆம் ஆண்டு காலத்தில் எலமைட் பேரரசு (Elamite kingdom) ஈரானை முதன் முதலாக ஆட்சி செய்தது.

கி.பி 651 காலகட்டத்தில் இஸ்லாமியர்கள் ஈரானை கைப்பற்றினர். பின்னர் இங்கு இஸ்லாமியப் பேரரசுகள் பாரசீக மொழியையும், இஸ்லாம் பண்பாட்டையும் நாடு முழுவதும் பரப்பினர். இதில் தகிரியர், சபாரியர், சமானியர், புயியர் போன்றோர் மிக முக்கிய பேரரசுகளாக உள்ளனர்.

## செல்வம்

ஈரானில் 1906 ஆம் ஆண்டு பாரசீக அரசியலமைப்பிற்கு உட்பட்ட நாடாளுமன்றம் கட்டப்பட்டது. 1979 ஆம் ஆண்டு ஈரான் ஒரு இஸ்லாமிய குடியரசு நாடாக உருவானது. ஷியா முஸ்லீம் இஸ்லாம் நாட்டின் அதிகாரப்பூர்வ மதமாகவும், பாரசீகம் உத்தியோகபூர்வ மொழியாகவும் உள்ளது.

ஈரான் நாட்டில் 30 மாகாணங்கள் உள்ளது. மாகாணங்கள் முறையே நியமிக்கப்பட்ட ஆளுநரால் ஆட்சி செய்யப்படுகிறது. நாட்டின் குடியரசு தலைவர் அந்நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பை கொண்டுள்ளார். இவர் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்ந்தெடுக்கப்படுகிறார். ஈரான் நாட்டின் தற்போதைய குடியரசு தலைவராக இப்ராஹிம் ரைசி உள்ளார்.

ஈரானில் 26 பாரம்பரிய கலாச்சார தளங்கள் உள்ளதாக யுனெஸ்கோ அறிவித்துள்ளது.

அதிக மக்கள் தொகை நெருக்கடி உள்ள நாடாக ஈரான் உள்ளது. இங்கு கடந்த 1950 ஆம் ஆண்டு முதல் 2002 வரையிலான காலகட்டத்தில் மக்கள் தொகையானது 27 சதவிகிதத்திலிருந்து 60 சதவிகிதமாக உயர்ந்துள்ளது.

இதனால் டெஹ்ரான், இஸ்:பஹான், அஹ்வால், கொம் ஆகிய நகரங்களில் மக்கள் தொகை நெருக்கடி அதிகளவில் உள்ளது.

2005 ஆம் ஆண்டு முதல், ஈரானின் அணுசக்தி திட்டம் சர்வதேச அளவில் சர்ச்சையை ஏற்படுத்தியது. குறிப்பாக அமெரிக்கா ஈரானை கடுமையாக எதிர்த்தது.

இதனால் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு கவுன்சில் ஈரானுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதித்தது. இந்த நடவடிக்கையானது ஈரானை அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக மற்ற உலக நாடுகளிலிருந்து தனிமைப்படுத்தியது

இங்கு புதை படிவ பொருட்கள் அதிகளவில் உள்ளதால், ஈரான் எண்ணெய் வளம் மிக்க நாடாக உள்ளது. இது நாட்டின் பொருளாதாரத்தில் மிக முக்கியமான அங்கம் வகிக்கிறது. ஈரானிலிருந்து வெனிசுவேலா (எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு), சீனா உள்ளிட்ட நாடுகளுக்கு அதிக அளவில் கச்சா எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. குறிப்பாக நாள் ஒன்றிற்கு 1.23 பில்லியன் பரல் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இப்படி பல சிறப்பம்சங்களை பெற்றுள்ள ஈரானை, உலகின் மிகப்பழமையான நாடுகளில் முதலாவது நாடாக உலக மக்கள்தொகை பதிப்பாய்வு அறிவித்துள்ளது.